௩௫ ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்க மோசேக்குக் கூடாதிருந்தது; ஏனெனில் மேகம் அதின்மேலே தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

௩௬ மேகம் வாசஸ்தலத்திலிருந்து எழும்புகிறபொழுதுதானே, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பயணங்களுக்கெல்லாம் புறப்படுவார்கள்.

௩௭ மேகம் எழும்பாதிருந்ததேயாகில், அவர்கள் அது எழும்பும் நாள்மட்டும் பயணம்பண்ணாதிருப்பார்கள்.

௩௮ அதேதெனில் இஸ்ரவேல் வீட்டாருடைய எல்லாப் பயணங்களிலும் அவர்கள் எல்லாருடைய கண்களுக்கு முன்பாகப் பகலில் வாசஸ்தலத்தின்மேலே கர்த்தருடைய மேகம் இருந்தது, இரவிலோவென்றால், அக்கினி அதில் இருந்தது.

மோசே எழுதின

மூன்றாம் ஆகமம்.

௧. அதிகாரம்.

கர்த்தர் ஆசரிப்பின் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு அவனோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்களுக்குச் சொல்லவேண்டியதேதென்றால், உங்களில் ஒரு மனிதன் கர்த்தருக்குப் பலியைச் செலுத்தப்போனால், மாட்டுமந்தையிலும் ஆட்டுமந்தையிலுமுள்ள மிருகங்களில் எடுத்து, உங்கள் காணிக்கைகளைச் செலுத்துவீர்களாக.

௩ ¶ அவன் செலுத்துவது மாட்டுமந்தையில் எடுக்கிற சர்வாங்கதகனபலியானால், அவன் பழுதற்ற காளையைச் செலுத்துவானாக; கர்த்தரின் சந்நிதியிலே தன்மேலே பிரியம்வர, அவன் அதை *ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கொண்டுவந்து,

௪ அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படும்படிக்குத் தன் கையை அதினுடைய தலையின்மேல் வைத்து,

௫ கர்த்தருக்கு முன்பாகக் காளையின் குரல்வளையை அறுக்கக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைக் கொண்டுவந்து, அதை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலிருக்கிற பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௬ பிற்பாடு அவன் தகனபலியைத் தோலுரித்து, அதை அதின் சந்துசந்தாகத் துண்டித்துப்போடுவானாக.

௭ அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலிபீடத்தின்மேலே அக்கினியைப் போட்டு, அக்கினியின்மேலே கட்டைகளை அடுக்கி,

௮ பிற்பாடு அவன் குமாரராகிய அந்த ஆசாரியர்கள் துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் பலிபீடத்தின்மேல் அக்கினியின்மேலிருக்கிற கட்டைகளின்மீதில் அடுக்கிவைக்கக்கடவர்கள்.

௯ அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவுவானாக; அவைகளை எல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியாகக் கொளுத்திவிடக்கடவன்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௰ ¶ அவன் ஆட்டுமந்தையிலுள்ள ஆடுக

---

*௨ மோ. ௰௨. ௰௩, ௰௪.

ளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் எடுத்து, சர்வாங்கதகனபலியைச் செலுத்தப் போனானேயாகில், அவன் பழுதற்ற கடாவைக் கொண்டுவந்து,

௧௧ கர்த்தருக்கு முன்பாகப் பலிபீடத்தின் வடபுறத்திலே அதின் குரல்வளையை அறுக்கக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௧௨ பிற்பாடு அவன் அதை அதின் சந்துசந்தாகத் துண்டித்து, அதின் தலையையும் அதின் கொழுப்பையும் கூடவைப்பானாக; அவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே அக்கினியின்மேல் இருக்கிற கட்டைகளின்மீதில் அடுக்கிவைக்கக்கடவன்.

௧௩ குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினாலே கழுவுவானாக; அவைகளை எல்லாம் ஆசாரியன் கொண்டுவந்து, பலிபீடத்தின்மேலே கொளுத்திவிடக்கடவன், அது சர்வாங்கதகனபலி; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௧௪ ¶ அவன் பறவைகளில் எடுத்து, கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியைச் செலுத்தப் போனானேயாகில், காட்டுப்புறாக்களிலாகிலும் புறாக்குஞ்சுகளிலாகிலும் எடுத்துச் செலுத்தக்கடவன்.

௧௫ அதை ஆசாரியன் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அதின் தலையைக் கிள்ளிப் பிடுங்கி, பலிபீடத்திலே கொளுத்திவிட்டு, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் சுவரிலே விழவிட்டு,

௧௬ அதின் இரைப்பையை அதின் இறகுகளோடுங்கூட வாங்கி, அதைப் பலிபீடத்தண்டையிலே கிழக்கே சாம்பலிருக்கிற இடத்திலே போட்டு,

௧௭ பிற்பாடு அதை அதின் செட்டைகளுக்குள்ளே இரண்டாக்காமல் பிளப்பானாக; பிற்பாடு ஆசாரியன் அதைப் பலிபீடத்தின்மேலே அக்கினியின்மேலிருக்கிற கட்டைகளின்மீதில் கொளுத்திப்போடக்கடவன்; அது சர்வாங்கதகனபலி; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௨. அதிகாரம்.

ஒரு ஆத்துமா கர்த்தருக்குக் காணிக்கையான படைப்பைச் செலுத்துவதுண்டானால், அவன் படைப்பு மெல்லியமாவாயிருப்பதாக; அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மீதில் குங்குலிகம்போட்டு,

௨ அதை ஆரோனின் குமாரரான ஆசாரியர்களண்டைக்குக் கொண்டுவருவானாக; அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய எல்லாக் குங்குலிகத்தோடுங்கூட எடுத்து, நினைப்புக்கான அதைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௩ காணிக்கையில் மீதியானதோவென்றால், ஆரோனையும் அவன் குமாரரையும் சேரக்கடவது; கர்த்தருடைய தகனங்களில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௪ ¶ அடுப்பிலே சுட்ட காணிக்கையான படைப்பைச் செலுத்தப் போனானேயாகில், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவின் புளிப்பில்லாத அதிரசங்களும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளுமாய் இருப்பதாக.

௫ ¶ நீ படைப்பது தட்டின்மேல் சுட்ட காணிக்கையேயானால், அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினுடையதாய் இருப்பதாக.

௬ அதைத் துண்டுகளாகப் பிட்டு, அதின்மேல் எண்ணெய் வார்ப்பாயாக; அது ஒரு காணிக்கை.

௭ ¶ நீ படைப்பது சட்டியிலே செய்யப்படுகிற காணிக்கையேயானால், அது எண்ணெயிலே மெல்லிய மாவினாலே செய்யப்படுவதாக.

௮ இப்படிச் செய்யப்பட்ட காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக;

அது ஆசாரியனண்டையில் சேர்ந்தபொழுது, அவன் அதைப் பலிபீடத்திற்குக் கொண்டுபோய்,

௯ நினைப்புக்கான பங்கைக் காணிக்கையிலிருந்து ஏறெடுத்து, பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௰ காணிக்கையில் மீதியானதோவென்றால், ஆரோனையும் அவன் குமாரரையும் சேரக்கடவது; கர்த்தருடைய தகனங்களில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௰௧ ¶ கர்த்தருக்குச் செலுத்தும் ஒரு காணிக்கையும் உப்பினதாகச் செய்யப்படாதிருப்பதாக; ஏனெனில் புளித்த மாவுள்ளதொன்றையும் தேனுள்ளதொன்றையும் கர்த்தருக்குத் தகனமாகக் கொளுத்தீர்களாக.

௰௨ முதல் கனிகளின் படைப்பாக, அவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தலாம்; ஆனால் பலிபீடத்தின்மேல் அவைகள் ஆற்றுகிற வாசனையாக ஏற்றப்படவேண்டாம்.

௰௩ ¶ உன் காணிக்கையாகிற எந்தப் படைப்பும், *உப்பினால் சாரம் ஏற்றப்படுவதாக; உன் காணிக்கையிலே உன் பராபரனுடைய உடம்படிக்கையின் உப்பைக் குறைய ஒட்டாமல், நீ படைப்பதிலே எல்லாம் உப்பைச் செலுத்தக்கடவாய்.

௰௪ நீ முதல் பலன்களின் காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துகிறதுண்டானால், பச்சையான நிறைந்த கதிர்களை நெருப்பிலே சுட்டு உதிர்த்து, இப்படியே உன் முந்தினபலன்களின் காணிக்கையைக் கொண்டுவந்து,

௰௫ அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மீதில் குங்குலிகம் போடுவாயாக; அது ஒரு காணிக்கை.

௰௬ பிற்பாடு ஆசாரியன் உதிர்க்கப்பட்டதிலும் எண்ணெயிலும் நினைப்புக்கான பங்கை, அதினுடைய எல்லாக் குங்குலிகத்தோடும்கூட எடுத்துக் கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கான தகனம்.

௩. அதிகாரம்.

அவன் செலுத்துவது சமாதான பலியானால், அப்பொழுது அதை மாட்டுமந்தையில் எடுத்துச் செலுத்தப் போனானேயாகில், அவன் அது ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி, பழுதற்றிருக்கிறதைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து,

௨ அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௩ பிற்பாடு சமாதானபலியிலே குடல்களை மூடிய கொழுப்பையும், குடல்களின்மேல் இருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௪ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கும் கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௫ அதை ஆரோனின் குமாரர் பலிபீடத்திலே, அக்கினியின்மேலுள்ள கட்டைகளின்மேலே போட்டிருக்கும் சர்வாங்கதகனபலியின்மீதில் போட்டு, கொளுத்தக்கடவர்கள்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௬ ¶ அவன் ஆட்டுமந்தையில் எடுத்து, கர்த்தருக்குச் சமாதானபலியைச் செலுத்தப் போனானேயாகில், அப்பொழுது அது ஆண்ஆனாலும் பெண்ஆனாலும் சரி, பழுதற்றிருக்கிறதைச் செலுத்துவானாக.

௭ ஆட்டைச் செலுத்தவேண்டுமென்றால், அவன் அதைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து,

௮ அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, ஆசரிப்பின் கூடாரத்திற்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பா

---

*மாற். ௯. ௪௯. கொலோ. ௪. ௬.

னாக; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௯ பிற்பாடு அவன் சமாதான பலியிலே அதின் கொழுப்பையும், நடு எலும்பிலே பிடுங்கின முழு வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகளின்மேல் இருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௰ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௰௧ அதை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கான தகன ஆகாரம்.

௰௨ ¶ அவன் செலுத்துவது வெள்ளாடாயிருந்ததேயானால், அவன் அதைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து,

௰௩ அதினுடைய தலையின்மேல் தன் கையை வைத்து, ஆசரிப்பின் கூடாரத்திற்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௰௪ அதிலே அவன் குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௰௫ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௰௬ அவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது ஆற்றுகிற வாசனையாகும் தகன ஆகாரம்; எல்லாக் கொழுப்பும் கர்த்தருடையது.

௰௭ *கொழுப்பும் இரத்தமும் என்னப்பட்டதொன்றையும் நீங்கள் புசிக்கவேண்டாமென்பது, உங்கள் வாசஸ்தலங்கள் எங்குமுள்ள உங்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாயிருப்பதென்று சொல்லென்றார். *௩ மோ. ௭. ௨௩, ௨௭: ௰௭. ௰, ௰௪.

௪. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒரு ஆத்துமா கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றைத் தப்பிதத்தினாலே மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவம்பண்ணினால், அறியவேண்டியதாவது:

௩ அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியன் சனத்தைக் குற்றத்திற்குள்ளாக்கிப் பாவம் செய்தால், அவன் செய்த பாவத்தினிமித்தம், கர்த்தருக்குப் பாவம்போக்கும் பலியாக மாடுகளிலே பழுதற்ற ஒரு காளை எருதைச் செலுத்தி,

௪ அதை ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து, அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, கர்த்தருக்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக.

௫ அப்பொழுது அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியன் காளை எருதின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, அதை ஆசரிப்பின் கூடாரத்திலே கொண்டுவந்து,

௬ தன் விரலை இரத்தத்திலே தோய்த்து, எழுதரம் கர்த்தருக்கு முன்பாகப் பரிசுத்தஸ்தலத்தின் திரைக்கு எதிரே தெளிக்கக்கடவன்.

௭ பிற்பாடு ஆசாரியன் அந்த இரத்தத்திலே கொஞ்சம் ஆசரிப்பின் கூடாரத்திலே கர்த்தருக்குமுன்பாக இருக்கிற சுகந்தவர்க்கங்களினுடைய தூபபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, காளை எருதினுடைய இரத்தத்தை எல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

௮ பாவம்போக்கும் பலியான காளை எருதின் சகல கொழுப்பாகிய குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௯ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிடுங்கி,

௰ சமாதானபலியான மாட்டிலிருந்து எடுக்கிறதுபோல, அதிலிருந்து எடுத்தவைகளைத் தகனபலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்.

௰௧ ஆனால் காளை எருதின் தோலையும், அதின் எல்லா மாம்சத்தையும், அதனோடேகூட அதின் தலையையும், தொடைகளையும் அதின் குடல்களையும், அதின் சாணியையும்,

௰௨ காளை எருது முழுவதையும், அவன் பாளயத்திற்குப் புறம்பே சாம்பலைக் கொட்டுகிற சுத்தமான இடத்திலே கொண்டுபோய், கட்டைகளின்மேலே போட்டு, அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவன்; கொட்டி இருக்கிற சாம்பலின்மேலேதானே அதைச் சுட்டெரிக்கக்கடவன்.

௰௩ ¶ ஆனால் இஸ்ரவேலின் சபை எல்லாம் தப்பிநடந்து, காரியம் தங்கள் கண்களுக்கு மறைவாயிருக்கிறதினாலே, கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து குற்றவாளிகளாகப் போனால்,

௰௪ அப்பொழுது அவர்கள் செய்த பாவம் அறியப்பட்டதாகில், சபை மாடுகளில் ஒரு காளை எருதைப் பாவம்போக்கும் பலியாகச் செலுத்தி, அதை ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாகக் கொண்டுவந்து,

௰௫ சபையின் மூப்பர் கர்த்தருக்கு முன்பாகத் தங்கள் கைகளை அதினுடைய தலையின்மேலே வைப்பார்களாக; பிற்பாடு கர்த்தருக்கு முன்பாகக் காளை எருதின் குரல்வளை அறுக்கப்படுவதாக.

௰௬ அப்பொழுது அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியன் அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஆசரிப்பின் கூடாரத்திலே கொண்டுவந்து,

௰௭ தன் விரலை இரத்தத்திலே தோய்த்து. ஏழுதரம் கர்த்தருக்கு முன்பாகத் திரைக்கு எதிரே தெளித்து,

௰௮ ஆசரிப்பின் கூடாரத்திலே கர்த்தருக்குமுன்பாக இருக்கிற பீடத்தினுடைய கொம்புகளின்மேலே அதிலே கொஞ்சம் பூசி, இரத்தத்தை எல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலின்முன் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

௰௯ அதின் கொழுப்பை எல்லாம் அதிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேலே கொளுத்தி,

௨௰ பாவம்போக்கும் அந்தக் காளை எருதை எப்படிச்செய்தானோ, அப்படி இதையும் செய்து, இந்த அடைவாய் அவர்கள் பாவத்தை நிவிர்த்தி ஆக்கக்கடவன்; அப்பொழுது அவர்களுக்கு மன்னிக்கப்படும்.

௨௧ பிற்பாடு காளை எருதைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய், முந்தின காளை எருதைச் சுட்டெரித்ததுபோலச் சுட்டெரிக்கக்கடவன், இது சபையின் பாவம்போக்கும் பலி.

௨௨ ¶ ஒரு பிரபு தன் பராபரனாகிய கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றை மீறி, தப்பிதத்தினாலே செய்யத்தகாததைச் செய்து, பாவம்பண்ணி, குற்றவாளியாகப்போனால்,

௨௩ அல்லவென்று அவன் செய்த பாவம் அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதானால், அவன் வெள்ளாடுகளிலே பழுதற்ற ஒரு கடாவைத் தன்னுடைய பலியாகக் கொண்டுவந்து,

௨௪ தன் கையை அதினுடைய தலையின்மேலே வைத்து, சர்வாங்கதகனபலி குரல்வளை அறுக்கப்படுகிற இடத்திலே கர்த்தருக்குமுன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக; அது பாவம்போக்கும் பலி.

௨௫ அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்

தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, அதின் இரத்தத்தைத் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

௨௬ அதின் கொழுப்பை எல்லாம் சமாதானபலியின் கொழுப்பைப்போலப் பலிபீடத்தின்மேலே கொளுத்தி, இந்த அடைவாய் அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக் கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௨௭ ¶ தேசத்துச் சனத்தில் ஒரு ஆத்துமா தப்பிதத்தினாலே கர்த்தரின் கற்பனைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவம்பண்ணி, குற்றவாளியானால்,

௨௮ அல்லவென்று அவன் செய்த பாவம் அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதானால், அவன் செய்த பாவத்தின்நிமித்தம் வெள்ளாடுகளிலே பழுதற்ற பெண்ணாட்டைத் தன்னுடைய பலியாகக் கொண்டுவந்து,

௨௯ பாவம்போக்கும் பலியினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, சர்வாங்கதகனம் செய்யப்படுகிற ஸ்தலத்திலே அதின் குரல்வளையை அறுப்பானாக.

௩௦ அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, மற்ற இரத்தத்தை எல்லாம் பலிபீடத்தடியில் ஊற்றிவிட்டு,

௩௧ கொழுப்புச் சமாதான பலியிலிருந்து பிடுங்கப்படுவதுபோல, அதின் கொழுப்பை எல்லாம் பிடுங்கி, பலிபீடத்தின்மேலே கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்தி, இந்த அடைவாக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௩௨ ¶ பாவம்போக்கும் பலியாக ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர மனதாயிருந்தானேயாகில், அவன் பழுதற்ற பெண்குட்டியைக் கொண்டுவந்து,

௩௩ பாவம்போக்கும் பலியினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, சர்வாங்கதகனபலி குரல்வளை அறுக்கப்படும் தலத்திலே அதின் குரல்வளையைப் பாவம்போக்கும் பலியாகும்படிக்கு அறுப்பானாக.

௩௪ அப்பொழுது ஆசாரியன் இரத்தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, இரத்தத்தை எல்லாம் பலிபீடத்தடியில் ஊற்றிவிட்டு,

௩௫ சமாதானபலியான ஆட்டுக்குட்டியின் கொழுப்புப் பிடுங்கப்படுவதுபோல, அதின் கொழுப்பை எல்லாம் பிடுங்கி, பலிபீடத்தின்மேலே கர்த்தருடைய தகனபலிகளின்மீதில் போட்டுக் கொளுத்தி, இந்த அடைவாக அவன் செய்த பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௫. அதிகாரம்.

ஒரு ஆத்துமா கண்ட, அல்லது அறிந்த சாட்சியாய் இருந்து, ஆணையிடப்பட்ட சத்தத்தைக் கேட்டும் காரியத்தை அறிவிக்காதே போகிற பாவத்தைச் செய்தால், அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௨ அல்லது தீட்டான காட்டுச் சீவனின் உடலாகிலும் சரி, தீட்டான மிருகத்தின் உடலாகிலும் சரி, தீட்டான ஊர்பவைகளின் உடலாகிலும் சரி, அப்படிக்கொத்த தீட்டான யாதொரு வஸ்துவை ஒரு ஆத்துமா அறியாமையினாலாகிலும் தொட்டால் அவன் தீட்டும் குற்றமுமுள்ளவன்.

௩ அல்லது எந்தத் தீட்டினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை அவன் அறியாமல் தொட்டுப் பிற்பாடு அறிந்தால், அவன் குற்றமுள்ளவன்.

௪ மனிதர் பதறி ஆணையிடும் எந்தக்காரியத்திலும் சரி, ஒரு ஆத்துமாத் தீமைசெய்கிறதற்காகிலும் நன்மை செய்கிறதற்காகிலும் தன் உதடுகளினாலே பதறி ஆணையிட்டு, அதை அறியாமல் செய்து, பிற்பாடு அறிவடைந்தால், அதிலே குற்றமுள்ளவனாயிருப்பான்.

௫ இப்படிக்கொத்தவைகளில் ஒன்றிலே ஒருவன் குற்றமுள்ளவனானபொழுது, அவன் தான் செய்த பாவத்தை அறிக்கையிட்டு,

௬ அதின்நிமித்தம் கர்த்தருக்குத் தன் பாவக்குற்றத்தைப் போக்கும் பலியாக, ஆடுகளிலாகிலும்வெள்ளாடுகளிலென்கிலும் ஒரு பெண் குட்டியைப் பிடித்துக்கொண்டுவருவானாக; அதினாலே ஆசாரியன் அவனுக்காக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்.

௭ ¶ ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவன் கைக்கு இல்லாதிருந்ததேயானால், அவன் தான் செய்த பாவத்தின் குற்றத்தைப் போக்கும் பலியாக, இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இரண்டு புறாக்குஞ்சுகளையாகிலும் ஒன்றைப் பாவம்போக்கும் பலியாகவும் மற்றதைச் சர்வாங்க தகனபலியாகவும் கர்த்தருக்குச் செலுத்தி,

௮ அவைகளை ஆசாரியனண்டையிலே கொண்டுவருவானாக; இவன் பாவம்போக்கும் பலியாகிறதை முதல் சேரப்பண்ணி, அதின் தலையை அதின் பிடரியின் கிட்டக் கிள்ளி, இரண்டாக்காமல் வைத்து,

௯ அதின் இரத்தத்திலே கொஞ்சம் பலிபீடத்தின் சுவரிலே தெளித்து, மீதியான இரத்தத்தைப் பலிபீடத்தடியிலே விழவிடுவானாக; அது பாவம்போக்கும்பலி.

௰ மற்றதை அவன் நியாய முறைமையின்படியே சர்வாங்கதகனபலியாக்கி, இப்படி ஆசாரியன் அவனுக்காக அவன் செய்த பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன், அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௰௧ ¶ இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இரண்டு புறாக்குஞ்சுகளையென்கிலும் கொண்டுவர, அவன் கைக்கு இல்லாதிருந்ததேயாகில் பாவம் செய்தவன் பாவம்போக்குதலுக்காக ஒரு மரக்கால் மெல்லியமாவிலே பத்தில் ஒரு பங்கைத் தன் காணிக்கையாகக் கொண்டுவந்து, அது பாவம் போக்குதலானபடியினாலே, அதின்மேல் எண்ணெய் வாராமலும் குங்குலிகம் போடாமலுமிருந்து,

௰௨ அதை ஆசாரியனண்டையில் கொண்டுவருவானாக; அதிலே ஆசாரியன் நினைப்புக்கான பங்காகத் தன் கைப்பிடி நிறையப் பிடித்தெடுத்து, பலிபீடத்தின்மேலே கர்த்தருடைய தகனபலிகளின்மீதில் போட்டுக் கொளுத்தக்கடவன்; அது பாவம் போக்குதல்.

௰௩ இப்படி ஆசாரியன் அந்தப் பாவங்களில் ஒன்றைச் செய்தவனுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்; மீதியானது காணிக்கையைப்போல ஆசாரியனைச் சேருமென்றார்.

௰௪ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௫ ஒரு ஆத்துமா கர்த்தருடைய பரிசுத்தமானவைகளிலே தப்பிதத்தினாலே அநியாயம்பண்ணிப் பாவம்செய்தால், அவன் தன் குற்றத்தைப் போக்க, நீ பரிசுத்தஸ்தலத்துச் சேக்கல் கணக்காய் அவன்மேலே சுமத்தும் அபராதப்படி, அத்தனை வெள்ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைக் குற்றம்போக்கும் பலியாகக் கர்த்தருக்குக் கொண்டுவந்து,

௰௬ பரிசுத்தமானதிலே தான் பாவம்செய்தெடுத்ததைச் செலுத்தி, அதிலே ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, ஆசாரியனுக்குக் கொடுப்பானாக; அப்பொழுது ஆசாரியன் குற்றம்போக்கும் ஆட்டுக்கடாவினாலே அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௰௭ ¶ ஒரு ஆத்துமா கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றை மீறி, செய்யத்தகாததை அறியாமையினாலாகிலும் செய்து பாவம்பண்ணினால், அவன் குற்றமுள்ளவனாயிருந்து, தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௰௮ ஆகையால் அவன் குற்றம்போக்கும்

பலியாக, உன் மதிப்புக்குச் சரியான, பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை ஆசாரியனண்டைக்குக் கொண்டுவருவானாக; அப்பொழுது ஆசாரியன் அவன் அறியாமல் செய்த தப்பிதத்தை அவனுக்காக நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௰௯ அது குற்றம் போக்கும்பலி; ஏனெனில் கர்த்தருக்கு நேரஸ்தன் ஆனான் என்றார்.

௬. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ ஒரு ஆத்துமா கர்த்தருக்கு விரோதமாக அநியாயம்செய்து, தன் அடைக்கலத்திலே கொடுக்கப்பட்டதிலும் அல்லது தன் கையிலே வைக்கப்பட்டதிலும் தனக்கடுத்தவனுக்கு மாறாட்டம்பண்ணி, அல்லவென்று எதையாகிலும் பறித்துக்கொண்டு, அல்லது தனக்கடுத்தவனுக்கு இடுக்கண்செய்து,

௩ அல்லது காணாமல்போனதைக் கண்டுபிடித்தும், அதை மறுதலித்துப் பொய்யாணையிட்டும், மனிதன் பாவத்தைக் கட்டிக்கொண்டு செய்யும் இவை முதலான சகல காரியங்களிலும் ஒன்றிலே பாவம்செய்திருந்தால்,

௪ அவன் செய்த பாவத்தினாலே குற்றவாளியானபடியினாலே, தான் பறித்துக்கொண்டதையும், அல்லது இடுக்கண்செய்து வாங்கினதையும், அல்லது தன் அடைக்கலத்திலே வைக்கப்பட்டதையும், அல்லது தான் கண்டுபிடித்த காணாமல்போயிருந்த வஸ்துவையும்,

௫ அல்லது தான் பொய்யாணையிட்ட சகலத்தையும், *திரும்பக் கொடுத்து, அந்த முதலைச் செலுத்துகிறதும் அல்லாமல், அதில் ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, அதைத் தன் குற்றம்போக்குதலின் நாளிலே அதின் எசமாநனுக்குக் கொடுத்துவிட்டு,

*ஏசே. ௩௩. ௰௫.

௬ தன் குற்றத்தைப் போக்கும்பலியாக, உன் மதிப்புக்குச் சரியான, பழுதற்ற ஆட்டுக்கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தி, அதை ஆசாரியனண்டைக்குக் கொண்டுவருவானாக.

௭ அப்பொழுது ஆசாரியன் கர்த்தருக்கு முன்பாக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவன் குற்றவாளியாகிச் செய்த அப்படிப்பட்ட எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்றார்.

௮ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௯ நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கற்பிக்கவேண்டியதாவது: சர்வாங்கதகனபலியின் நியாயப்பிரமாணம் ஏதெனில், அது இராமுழுவதும் விடியற்காலம்மட்டும் பலிபீடத்தின்மேலே வேகவும் பலிபீடத்தின் அக்கினியே அதில் எரியவும்கடவது.

௰ ஆசாரியன் சணல்நூலான தன் அங்கியை உடுத்து, சணல்நூலான தன் சல்லடத்தைச் சதையின்மேலே தரித்துக்கொண்டு, அக்கினியானது பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியை எரித்துவிட்டபிற்பாடு, சாம்பலை எடுத்து, அதைப் பலிபீடத்தருகே கொட்டி,

௰௧ பிற்பாடு தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போட்டு, வேறே வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோயக் கொட்டக்கடவன்.

௰௨ பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினியோவெனில், அதில் அவியாமல் எரிவதாக; ஆசாரியன் காலையிலெல்லாம் அதின்மேலே கட்டைகளை எரியப்போட்டு, அதின்மேல் சர்வாங்கதகனபலியை வரிசையாக வைத்து, அதின்மீதில் சமாதானபலிகளின் கொழுப்புகளைப் போட்டு, கொளுத்தக்கடவன்.

௰௩ பலிபீடத்தின்மேலே அக்கினி அவியாமல் எப்பொழுதும் எரிவதாக.

௰௪ ¶ காணிக்கையின் நியாயப்பிரமாணமாவது: ஆரோனின் குமாரரில் ஒருவன் அதைக் கர்த்தருக்குமுன்பாகப் பலிபீடத்தின்முன் கொண்டுவந்து.

௰௫ தாணிக்கையின் மெல்லிய மாவிலும் அதின் எண்ணெயிலும் தன் கைப்பிடிநிறைய, காணிக்கையின்மேலுள்ள எல்லாக் குங்குலிகத்தோடும்கூட அள்ளி எடுத்து, நினைப்புக்கான அதைப் பலிபீடத்தின்மேலே கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்தக்கடவன்.

௰௬ அதில் மீதியானதை ஆரோனும் அவன் குமாரரும் புசிப்பார்களாக; அது புளிப்பில்லாததாகப் பரிசுத்தஸ்தலத்திலே புசிக்கப்படக்கடவது; ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்திலே அதைப் புசிப்பார்களாக.

௰௭ அது புளித்தமாவுள்ளதாகச் சுடப்படவேண்டாம்; அது நம்முடைய தகனங்களில் நாம் அவர்களுக்குக் கொடுத்த அவர்களுடைய பங்கு; பாவம்போக்கும் பலியைப்போலவும் குற்றம்போக்கும் பலியைப்போலவும் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௰௮ ஆரோனின் பிள்ளைகளில் ஆண்சாதியான யாவரும் அதைப் புசிக்கக்கடவர்கள்; கர்த்தருடைய தகனங்களில் அது உங்கள் தலைமுறைகளுக்கு நித்திய கட்டளையாய் இருக்கவும், அவைகளைத் தொடுகிறவனெல்லாம் பரிசுத்தமாய் இருப்பானாகவென்று சொல்லென்றார்.

௰௯ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௰ ஆரோன் அபிஷேகம்பண்ணப்படுகிற நாளிலே, அவனும் அவன் குமாரரும் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய படைப்பு என்னவெனில், ஒரு மரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை, காலையிலே பாதியும் அந்திநேரத்திலே பாதியும், நித்திய காணிக்கையாகச் செலுத்துவார்களாக.

௨௧ தட்டின்மேல் எண்ணெயிலே அது செய்யப்படக்கடவது; அதை நீ சுடப்பட்டதாகக் கொண்டுவந்து, காணிக்கையின் சுட்டதுண்டுகளைக் கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகச் செலுத்தக்கடவாய்.

௨௨ அவன் குமாரரில் அவன் ஸ்தலத்திலே அபிஷேகம்பண்ணப்படுகிற ஆசாரியனும் அப்படிச் செய்யக்கடவன்; அது நித்திய கட்டளை; கர்த்தருக்கென்று அது முழுதும் கொளுத்தப்படக்கடவது.

௨௩ ஆசாரியனுடைய எந்தக் காணிக்கையும் புசிக்கப்படாமல், முழுவதும் சுட்டெரிக்கப்படவேண்டுமென்றார்.

௨௪ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௫ நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியது, பாவம்போக்கும் பலியின் நியாயப்பிரமாணம் என்னவெனில், சர்வாங்கதகனபலி குரல்வளை அறுக்கப்படும் இடத்திலே, பாவம்போக்கும் பலியும் கர்த்தருக்குமுன்பாகக் குரல்வளை அறுக்கப்படக்கடவது; அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௨௬ பாவம்போக்க அதைப் பலியிடுகிற ஆசாரியன் அதைப் புசிக்கக்கடவன்; ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரமென்ற பரிசுத்தஸ்தலத்திலே அது புசிக்கப்படுவதாக.

௨௭ அதின் மாம்சத்தைத் தொடுகிறவன் எல்லாம் பரிசுத்தமாயிருப்பானாக; அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்திலே தெறித்ததானால், அதைப் பரிசுத்தஸ்தலத்திலே வெளுப்பாயாக.

௨௮ அது வேவிக்கப்பட்ட மண்பாண்டம் உடைக்கப்படக்கடவது; செப்புப்பானையில் வேவிக்கப்பட்டதேயானால், அது விளக்கப்பட்டுத் தண்ணீரில் அலசிப்போடக்கடவது.

௨௯ ஆசாரியரில் ஆண்சாதியானவன் எல்லாம் அதைப் புசிப்பானாக; அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௩௰ ஆனால் பாவம்போக்கும் எந்தப் பலியின் இரத்தத்திலே கொஞ்சம் பரிசுத்தஸ்தலத்திலே பாவத்தை நிவிர்த்தியாக்கும்

படிக்கு, ஆசரிப்பின் கூடாரத்திற்குள்ளே கொண்டுவரப்பட்டதோ, அந்தப் பலி புசிக்கப்படாமல் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படக்கடவது.

௭. அதிகாரம்.

குற்றம்போக்கும் பலியின் பிரமாணம் என்னவெனில், அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௨ சர்வாங்கதகனபலியைக் குரல்வளை அறுக்கும் இடத்திலே, குற்றம்போக்கும்பலியையும் குரல்வளை அறுப்பார்களாக; அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

௩ அதினுடைய எல்லாக் கொழுப்பையும், அதின் வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும்,

௪ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறுகுடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிடுங்கி, செலுத்துவானாக.

௫ இவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே, கர்த்தருக்குத் தகனமாகக் கொளுத்தக்கடவன்; அது குற்றம் போக்கும் பலி.

௬ ஆசாரியரில் ஆண்சாதியானவர்களெல்லாம் அதைப் புசிப்பார்களாக; பரிசுத்த ஸ்தலத்தில் அது புசிக்கப்படக்கடவது; அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௭ ¶ பாவம்போக்கும் பலிக்குக் குற்றம்போக்கும்பலி சரிசமானம்; இரண்டிற்கும் ஒரே நியாயப்பிரமாணம் இருக்கும்; அதினாலே பாவத்தை நிவிர்த்தியாக்கின ஆசாரியனை அது சேர்வதாக.

௮ ஒருவனுடைய சர்வாங்கதகனபலியை ஆசாரியன் செலுத்தினால், அதின் தோல் அதைச் செலுத்தின ஆசாரியனுடையதாய் இருக்கும்.

௯ அடுப்பிலே சுடப்பட்டதும் சட்டியிலும் தட்டின்மேலும் செய்யப்பட்டதுமான காணிக்கையாவும் அதைச் செலுத்துகிற ஆசாரியனுடையவைகளாயிருக்கும்.

௰ எண்ணெயிலே பிசைந்ததும் எண்ணெய் இல்லாததுமான சகல காணிக்கையும் ஆரோனுடைய எல்லாக் குமாரரையும் அவனவனுக்குச் சரியானபடி சேரும்.

௰௧ கர்த்தருக்குச் செலுத்துகிற சமாதானபலியின் நியாயப்பிரமாணம் என்னவெனில்,

௰௨ அதை ஸ்தோத்திரத்திற்காகச் செலுத்தினானால், அவன் ஸ்தோத்திரபலியோடும்கூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மா அதிரசங்களையும்,

௰௩ அவைகளும் தவிரப் புளித்தமா அப்பத்தையும், தன்னுடைய சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியோடும்கூடத் தன் படைப்பாகக் கொண்டுவந்து,

௰௪ அந்த எல்லாப் படைப்பிலும் ஒன்றைக் கர்த்தருக்கு ஏறெடுத்துச் செலுத்துவானாக; அது சமாதானபலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனுடையதாயிருக்கும்.

௰௫ அவனுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமோவென்றால், அவன் அதைச் செலுத்தின அன்றே புசிக்கப்படக்கடவது, அதிலொன்றும் விடியற்காலம்மட்டும் வைக்கப்படவேண்டாம்.

௰௬ அவன் செலுத்துகிற பலி ஒரு பொருத்தனையும், அல்லது உற்சாகப் பலியுமாயிருந்ததேயானால், அது செலுத்தப்பட்ட அந்நாளிலும் அதில் மீதியானது மறுநாளிலும் புசிக்கப்படுவதாக.

௰௭ ஆனால் பலியின் மாம்சத்தில் மூன்றாம் நாளில் மீதியாய் இருக்கிறது அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது.

௰௮ அவனுடைய சமாதானபலியின் மாம்சத்தில் மூன்றாம்நாளிலே புசிக்கவே புசிக்கப்பட்டால், அதைச் செலுத்தினவன் பிரி

யமாயிருப்பதில்லை, அது அவனுக்குப் பலியாமல் அருவருப்பாயிருக்கும்; அதிலே புசித்த ஆத்துமா தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௰௯ தீட்டான எந்த வஸ்துவும் தொட்ட அந்த மாம்சம் புசிக்கப்படாமல், அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது; புசிக்கப்படும் மாம்சத்திலோவென்றால், சுத்தமாயிருக்கிறவனெல்லாம் புசிக்கலாம்.

௨௰ ஒரு ஆத்துமா தன் தீட்டுத் தன்மேலிருந்தும் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்தானேயாகில், அந்த ஆத்துமா தன் சனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

௨௧ ¶ மனிதனுடைய தீட்டாவது, தீட்டான மிருகமாவது, தீட்டான எந்த அருவருப்புமாவது, ஒரு ஆத்துமா தீட்டான அப்படிக்கொத்த யாதொன்றைத் தொட்டிருந்தும், கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்திலே புசித்தால், அந்த ஆத்துமா தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பானென்றார்.

௨௨ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௩ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், மாடு ஆடு வெள்ளாடு என்றவைகளின் கொழுப்பில் ஒன்றையும் புசியீர்களாக.

௨௪ தானாய்ச் செத்ததின் கொழுப்பும் பீறுண்டதின் கொழுப்பும் பலவித வேலைக்கு வழங்கப்படலாம்; ஆனால் நீங்கள் அவைகளைப் புசிக்கவே புசிக்கவேண்டாம்.

௨௫ ஏனெனில் கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

௨௬ *உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் ஒரு பறவையின் இரத்தத்தையானாலும் ஒரு மிருகத்தின் இரத்தத்தையானாலும் புசியீர்களாக.

௨௭ யாதொரு இரத்தத்தைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பான் என்று சொல்லென்றார்.

௨௮ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௯ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், கர்த்தருக்குத் தன்னுடைய சமாதான பலியைச் செலுத்துகிறவன் அதிலே செலுத்துகிறதைக் கர்த்தருக்குக் கொண்டுவருவானாக.

௩௰ அவனுடைய கைகள் கர்த்தருடைய தகனங்களாகிய மார்க்கண்டத்தையும் அதனோடுங்கூட அதின்மேலே வைத்த கொழுப்பையும் கர்த்தருக்குமுன்பாகக் காணிக்கையாக அசைவாட்டும்படிக்குக் கொண்டுவரக்கடவது.

௩௧ அப்பொழுது ஆசாரியன் அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; மார்க்கண்டமோவெனில் ஆரோனையும் அவன் குமாரரையும்சேரும்.

௩௨ உங்கள் சமாதானபலிகளில் வலது முன்னந்தொடையையும் ஏறெடுக்கும்படிக்கு ஆசாரியனுக்குக் கொடுப்பீர்களாக.

௩௩ ஆரோனுடைய குமாரரில் சமாதான பலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு வலது முன்னந்தொடை பங்காகச் சேரும்.

௩௪ ஏனெனில் இஸ்ரவேல் புத்திரரின் சமாதானபலிகளில் அசைவாட்டின மார்க்கண்டத்தையும் ஏறெடுத்த முன்னந்தொடையையும் நாம் அவர்கள் கையில் வாங்கி, அவைகளை ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல் புத்திரரால் நடக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தோமென்று சொல்லென்றார்.

௩௫ கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம்செய்ய அவர் ஆரோனையும் அவன் குமாரரையும் சேர்த்தநாளிலே, இது அபிஷேகம் பண்ணப்பட்ட அவர்களுக்குக் கர்த்தருடைய தகனங்களிலே செல்லும் கட்டளைஆயிற்று.

*௩ மோ. ௩. ௰௭.

௩௬ இப்படி அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரராலே அவர்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாகக் கொடுக்கப்பட, கர்த்தர் அவர்களை அபிஷேகம்பண்ணின நாளிலே கற்பித்தார்.

௩௭ ¶ சர்வாங்கதகனத்திற்கும், காணிக்கைக்கும், பாவம்போக்கும் பலிக்கும், குற்றம்போக்கும் பலிக்கும், கைகளை நிரப்பும் பலிகளுக்கும், சமாதானபலிகளுக்கும், அடுத்த நியாயப்பிரமாணம் இதுதானே.

௩௮ கர்த்தருக்குத் தங்கள் செலுத்துதல்களைச் செலுத்த அவர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சீனாயின் வனாந்தரத்திலே கற்பிக்கும் நாளிலே இவைகளை மோசேக்குச் சீனாய் பர்வதத்திலே கட்டளைஇட்டார்.

௮. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரரையும் அழைத்து, வஸ்திரங்களையும் அபிஷேகத்தெண்ணெயையும் பாவம்போக்குதலுக்கு ஒரு காளை எருதையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் புளிப்பில்லாத அப்பங்களுள்ள ஒரு கூடையையும் கொண்டுவந்து,

௩ சபையை எல்லாம் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாகக் கூட்டென்றார்.

௪ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே மோசே செய்தான்; சபை ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு முன்பாகக் கூடினபொழுது,

௫ ¶ மோசே சபையுடனே, இது கர்த்தர் செய்யக் கற்பித்த காரியம் என்றான்.

௬ பிற்பாடு மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் சேர அழைத்து, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, அவர்களைத் தண்ணீரினாலே கழுவி,

௭ *அவனுக்கு உள்சட்டையைப் போட்டு, நடுக்கட்டுக் கட்டி, அங்கியை உடுத்து, ஆசாரிய சால்வையைப் போர்த்து, அதின்மேல் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சையை அவனுக்குக் கட்டி,
*௨ மோ. ௨௮. ௪.

௮ அவனுக்கு மார்ப்பதக்கத்தைத் தரித்து, மார்ப்பதக்கத்திலே *வெளிச்சங்களையும் உத்தமங்களையும் வைத்து, *௨ மோ. ௨௮. ௩௰.

௯ அவன் தலையிலே பாகையைப் போட்டு, பாகையின்மேல் அவன் முகத்திற்கு நேராகப் பரிசுத்த கிரீடமென்ற பொன்பட்டத்தைக் கட்டினான்.

௰ பிற்பாடு மோசே அபிஷேகத்தெண்ணெயை எடுத்துக்கொண்டு, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கி,

௰௧ அதில் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் தொட்டியையும் அதின் புரிமணையையும் பரிசுத்தமாக்கும்படிக்கு அபிஷேகம்பண்ணி,

௰௨ அபிஷேகத்தெண்ணெயிலே கொஞ்சம் *ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தமாக்கும்படிக்கு அபிஷேகம்பண்ணினான். *சங். ௱௩௩. ௨.

௰௩ பிற்பாடு மோசே ஆரோனின் குமாரரைச் சேர அழைத்து, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அவர்களுக்குச் சட்டைகளை உடுத்து, நடுக்கட்டுகளைக் கட்டி, குல்லாக்களைப் போட்டுக்கட்டி,

௰௪ ¶ பாவம்போக்குதலின் காளை எருதைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௰௫ அப்பொழுது அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் மற்ற இரத்தத்தைப் பிடித்து, தன் விரலினாலே பலிபீடத்தின் கொம்புகளின்மேலே சுற்றிலும் பூசி, பலிபீடத்திற்காகப் பாவம்போக்குதலைச் செய்து, இரத்தத்தைப் பலிபீடத்தடியில் ஊற்றிப்போட்டு, அதின்மேலே பாவநிவிர்த்தி உண்டாகும்படிக்கு அதைப் பரிசுத்தமாக்கினான்.

௰௬ பிற்பாடு மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, குடல்கள்மேலிருந்த எல்லாக் கொழுப்பையும் கல்லீரலின்மேல் இருந்த சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின் கொழுப்பையும் எடுத்துக்கொண்டு, பலிபீடத்தின்மேலே கொளுத்தி,

௰௭ காளை எருதையும் அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியாலே சுட்டெரித்தான்.

௰௮ ¶ பிற்பாடு சர்வாங்கதகனமாகும் ஆட்டுக்கடாவைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௰௯ அப்பொழுது அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்தான்.

௨௰ ஆட்டுக்கடா சந்துசந்தாகத் துண்டித்துப் போடப்பட்டபின் மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் கொளுத்தி,

௨௧ குடல்களையும் தொடைகளையும் தண்ணீரினாலே கழுவி, ஆட்டுக்கடாவை முழுவதும் பலிபீடத்தின்மேலே கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனைக்கான சர்வாங்கதகனமாகக் கொளுத்தினான்.

௨௨ ¶ பிற்பாடு கைகளை நிரப்புதலின் இரண்டாம் ஆட்டுக்கடாவைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௨௩ பிற்பாடு அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் இரத்தத்திலே கொஞ்சம் பிடித்து, ஆரோனுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரல்மேலும் வலதுகாலின் பெருவிரல்மேலும் பூசினான்.

௨௪ பிற்பாடு ஆரோனுடைய குமாரரையும் அழைத்து, அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரல்மேலும் வலதுகாலின் பெருவிரல்மேலும் பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

௨௫ கொழுப்பையும், வாலையும், குடல்கள்மேலிருந்த எல்லாக் கொழுப்பையும், கல்லீரலின்மேல் இருந்த சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும் எடுத்து,

௨௬ கர்த்தருக்குமுன்பாக வைத்திருந்த புளிப்பில்லாத அப்பங்களின் கூடையிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் எண்ணெய் அப்பமாகிய ஒரு அதிரசத்தையும் ஒரு அடையையும் எடுத்து, அந்தக் கொழுப்பின்மேலும் முன்னந்தொடையின்மேலும் வைத்து,

௨௭ அவைகளை எல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவன் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும் காணிக்கையாகக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டி,

௨௮ பிற்பாடு அவைகளை அவர்கள் உள்ளங்கைகளில் எடுத்து, பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியின்மீதில் கொளுத்தினான்; அது ஆற்றுகிற வாசனைக்கான கைநிரப்புதலின் பலியும் கர்த்தருக்குத் தகனமும் ஆயிற்று.

௨௯ பிற்பாடு மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருக்குமுன்பாகக் காணிக்கையாக அசைவாட்டினான்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவைகள் கைகளை நிரப்புதலின் ஆட்டுக்கடாவிலே மோசேயின் பங்காயின.

௩௰ ¶ மோசே அபிஷேகத்தெண்ணெயிலும் பலிபீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனின்மேலும் அவன் வஸ்திரங்களின்மேலும் அவன் குமாரரின்மேலும் அவர்கள் வஸ்திரங்களின்மேலும் தெளித்தான்; ஆரோனையும் அவன் வஸ்

திரங்களையும் அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தம் பண்ணினான்.

௩௧ ¶ கடைசியிலே மோசே ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொன்னதாவது: நீங்கள் அந்த மாம்சத்தை ஆசரிப்புக்கூடாரவாசலிலே வேவித்து, ஆரோனும் அவன் குமாரரும் அதைப் புசிப்பார்களாக என்று கற்பித்திருக்கிறபடியே, அங்கே அதையும் உங்கள் கைகளை நிரப்புதலின் கூடையிலிருக்கிற அப்பத்தையும் புசித்து,

௩௨ மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியாலே சுட்டெரித்து,

௩௩ கைகளை நிரப்புகிற நாள்கள் நிறைவேறும்மட்டும், ஏழுநாள் ஆசரிப்புக்கூடாரவாசலைவிட்டுப் புறப்படாதிருப்பீர்களாக; ஏனெனில் ஏழுநாள்மட்டும் உங்கள் கைகள் நிரப்பப்படும்.

௩௪ இந்நாளிலே செய்யப்பட்டதுபோல, உங்கள் பாவநிவிர்த்திக்காக, இனிமேலும் செய்யப்படவேண்டுமென்று கர்த்தர் கற்பித்தார்.

௩௫ நீங்கள் சாவாதபடிக்கு ஏழுநாள் இரவும்பகலும் ஆசரிப்புக்கூடாரவாசலிலிருந்து, கர்த்தருடைய காவலைக் காக்கக்கடவீர்கள்; ஏனென்றால் இப்படிக் கற்பிக்கப்பட்டேனென்றான்.

௩௬ கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள்.

௯. அதிகாரம்.

சம்பவித்ததேதென்றால் எட்டாம்நாளிலே, மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து,

௨ ஆரோனோடே சொன்னதாவது: நீ பாவம்போக்கும்பலியாக மாடுகளிலே பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும் சர்வாங்க தகனபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் பிடித்து, கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவா.

௩ ஆனால் இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதேதெனில்,கர்த்தருக்குமுன்பாகப் பலிஇடும்படிக்கு, நீங்கள் பாவம்போக்கும்பலியாகப் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவையும், சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், ஒரு ஆட்டுக்குட்டியையும்,

௪ சமாதானபலியாக ஒரு எருதையும், ஒரு ஆட்டுக்கடாவையும், எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும், கொண்டுவாருங்கள்; ஏனெனில் இன்று கர்த்தர் உங்களுக்குத் தரிசனையாவார் என்று சொல்லென்றான்.

௫ மோசே கற்பித்தவைகளை ஆசரிப்புக்கூடாரத்திற்குமுன்பாகக் கொண்டுவந்தார்கள்; சபை எல்லாம் சேர்ந்து, கர்த்தருக்குமுன்பாக நின்றது.

௬ அப்பொழுது மோசே, கர்த்தர் கற்பித்த இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படும் என்றான்.

௭ ¶ பிற்பாடு மோசே ஆரோனுடனே, நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கற்பித்தபடியே பாவம்போக்கும் உன் பலியையும் சர்வாங்கதகனமான உன் பலியையும் செலுத்தி, உனக்காகவும் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தி உண்டாக்கி, சனத்தின் பலியையும் செலுத்தி, அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கென்றான்.

௮ ¶ அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, தன் பாவம்போக்குதலின் கன்றுக்குட்டியைக் குரல்வளை அறுத்தான்.

௯ ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அவன் தன் விரலை இரத்தத்திலே தோய்த்து, பலிபீடத்தின் கொம்புகளின்மேலே பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தடியில் ஊற்றி,

௰ பாவம்போக்கும்பலியின் கொழுப்பையும், குண்டிக்காய்களையும், கல்லீரலைவிட்டு

வாங்கின சவ்வையும், பலிபீடத்தின்மேலே கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கொளுத்தப்படவைத்தான்.

௰௧ ஆனால் மாம்சத்தையும் தோலையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியாலே சுட்டெரித்தான்.

௰௨ ¶ பிற்பாடு சர்வாங்கதகனபலியின் குரல்வளையை அறுத்தான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அதைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்தான்.

௰௩ துண்டங்கள் ஆக்கப்பட்ட சர்வாங்கதகனபலியையும் தலையையும் அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அவன் அவைகளைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தப்படவைத்து,

௰௪ குடல்களையும் தொடைகளையும் கழுவி, பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனத்தின் மீதில் கொளுத்தப்படவைத்தான்.

௰௫ ¶ பிற்பாடு அவன் சனத்தின் பலியைக் கிட்டக் கொண்டுவந்து, சனத்திற்காகிய பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடாவைப் பிடித்து, அதின் குரல்வளையை அறுத்து, முந்தினவைக்குச் சரியாக அதைப் பாவம்போக்கும்பலியாக்கி,

௰௬ சர்வாங்கதகனபலியைக் கிட்டக் கொண்டுவந்து, நியாயமுறைமையின்படியே செலுத்தி,

௰௭ காணிக்கையையும் கிட்டக் கொண்டுவந்து, தன் உள்ளங்கையை அதினால் நிரப்பி, அதைக் காலையில் செலுத்தும் சர்வாங்கதகனமும் அல்லாமல், பலிபீடத்தின்மேல் கொளுத்தப்படவைத்தான்.

௰௮ பிற்பாடு சனத்தின் சமாதானபலியாகிய எருதையும் ஆட்டுக்கடாவையும் குரல்வளை அறுத்தான்; அதின் இரத்தத்தை ஆரோனின் குமாரர் அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அதைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்தான்.

௰௯ எருதிலும் ஆட்டுக்கடாவிலும் எடுத்த கொழுப்புகளையும் வாலையும், குடல்களை மூடியதையும், குண்டிக்காய்களையும், கல்லீரலின்மேலிருந்த சவ்வையும் கொண்டுவந்து,

௨௰ கொழுப்புகளை மார்க்கண்டங்களின்மேலே வைத்தார்கள்; அந்தக் கொழுப்புகளைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தப்படவைத்தான்.

௨௧ ¶ ஆனால் மார்க்கண்டங்களையும் வலதுமுன்னந்தொடையையும், ஆரோன் மோசேக்குக் கற்பித்தபடியே, கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக அசைவாட்டினான்.

௨௨ பிற்பாடு ஆரோன் தன் கைகளைச் சனத்திற்குநேராக ஏறெடுத்து, அவர்களை ஆசிர்வதித்து, தான் பாவம்போக்கும்பலியையும், சர்வாங்கதகனபலியையும், சமாதானபலியையும், செலுத்தின இடத்திலிருந்து இறங்கினான்.

௨௩ மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்து, வெளியே வந்து, சனத்தை ஆசிர்வதித்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை எல்லாச் சனத்திற்கும் காணப்பட்டது.

௨௪ ¶ *அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, பலிபீடத்தின்மேலிருந்த சர்வாங்கதகனபலியையும் கொழுப்புகளையும் எரித்துவிட்டது; சனமெல்லாம் அதைக் கண்டபொழுது கெம்பீரமாய் முகம்குப்புறவிழுந்தார்கள். *௧ இரா. ௰௮. ௩௮. ௨ நாளா. ௭. ௧.

௰. அதிகாரம்.

நாதாப், அபியூ என்ற ஆரோனின் குமாரரோவெனில், ஒவ்வொருவன் தன் தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் நெருப்பையும் அதின்மேலே தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கற்பிக்காதிருந்த அந்நிய அக்கினியை அவருக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

௨ அப்பொழுது அக்கினி கர்த்தரின் சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப்

பட்சித்தது; அங்கே கர்த்தருக்குமுன்பாகச் செத்தார்கள்.

௩ அப்பொழுது மோசே ஆரோனோடே, நம்மண்டையில் சேருகிறவர்களால் நாம் பரிசுத்தம் விளங்கி, எல்லாச் சனத்திற்கும் முன்பாக மகிமைப்படுவோமென்று கர்த்தர் பேசிச் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்.

௪ பிற்பாடு மோசே ஆரோனின் சிறிய தகப்பனான ஊசியேலின் குமாரராகிய மீசவேலையும் எலிசாப்பானையும் அழைத்து, அவர்களோடே, நீங்கள் சேர்ந்து, உங்கள் சகோதரரைப் பரிசுத்தஸ்தலத்திற்குமுன்பாக இருந்தெடுத்து, பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோங்கள் என்றான்.

௫ இவர்கள் மோசே சொன்னபடி சேர்ந்து, அவர்களை அவர்கள் சட்டைகளோடெடுத்து, பாளயத்திற்குப்புறம்பே கொண்டுபோனார்கள்.

௬ ¶ மோசே ஆரோனோடும் எலெயாசார், இத்தாமாரென்ற அவன் குமாரரோடும் சொன்னதாவது: நீங்கள் சாவாதபடிக்கும், சபையின்மேலெல்லாம் கடுங்கோபம் வாராதபடிக்கும் நீங்கள் உங்கள் தலைகளைத்திறவாமலும் உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் வீட்டார் எல்லாரும் கர்த்தர் சுட்ட இந்தச் சூட்டிற்காக அழுவார்கள்.

௭ நீங்கள் சாவாதபடிக்கு ஆசரிப்புக்கூடாரவாசலிலிருந்து புறப்படீர்களாக; ஏனெனில் கர்த்தருடைய அபிஷேகத்தெண்ணெய் உங்கள்மேல் இருக்கிறதென்றான்; மோசேயினுடைய வார்த்தையின்படியே செய்தார்கள்.

௮ ¶ கர்த்தர் ஆரோனோடே பேசிச் சொன்னதாவது:

௯ நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாவாதபடிக்கு, ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபொழுது, திராட்சப்பழ இரசத்தையும் லாகிரியுள்ளதையும் குடியீர்களாக.

௰ பரிசுத்தமானதற்கும் பரிசுத்தம் அல்லாததற்கும், தீட்டானதற்கும் சுத்தமானதற்கும், வித்தியாசம்பண்ணுவதற்கும்,

௰௧ கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன சகல பிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிப்பதற்கும், இது உங்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாய் இருக்குமென்றார்.

௰௨ ¶ மோசே ஆரோனோடும் மீதியான அவன் குமாரராகிய எலெயாசாரோடும் இத்தாமாரோடும் சொன்னதாவது: நீங்கள் கர்த்தருடைய தகனங்களில் மீதியான காணிக்கையை எடுத்துக்கொண்டு, பலிபீடத்தண்டையிலே புளிப்பில்லாததாகப் புசியுங்கள்; ஏனெனில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௰௩ அதைப் பரிசுத்தஸ்தலத்திலே புசிப்பீர்களாக; ஏனெனில் அது கர்த்தருடைய தகனங்களில் உன் கட்டளையும் உன் குமாரரின் கட்டளையுமானது; அதேனென்றால் இப்படிக் கற்பிக்கப்பட்டேன்.

௰௪ அசைவாட்டின மார்க்கண்டத்தையும், ஏறெடுத்த முன்னந்தொடையையும், நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் குமாரத்திகளும் சுத்தஸ்தலத்திலே புசிப்பீர்களாக; ஏனெனில் இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளில் அவைகள் உன்னுடைய கட்டளையாகவும், உன் பிள்ளைகளுடைய கட்டளையாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

௰௫ கொழுப்புகளின் தகனபலிகளோடேகூட அவர்கள் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக ஏறெடுக்கும் முன்னந்தொடையையும், அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் கொண்டுவருவார்கள்; அது கர்த்தர் கற்பித்தபடியே உன்னையும் உன்னோடேகூட உன் பிள்ளைகளையும் நித்திய கட்டளையாகச் சேருமென்றான்.

௰௬ ¶ பாவம்போக்கும்பலியான வெள்ளாட்டுக்கடாவை மோசே தேடவே தேடினான்; ஆனால் இதோ, சுட்டெரிக்கப்பட்

டிருந்தது; ஆகையால் எலேயாசார், இத்தாமார் என்ற ஆரோனின் மீதியான குமாரர் மேலே அவன் கடும்கோபமாகி,

௰௭ பாவம்போக்கும்பலியை நீங்கள் பரிசுத்தஸ்தலத்திலே புசியாதேபோனதென்ன? அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கின்றதே; சபையின் அக்கிரமத்தைச் சுமக்கவும், அவர்களுக்காகப் பாவநிவிர்த்தியைக் கர்த்தருக்குமுன்பாக உண்டாக்கவும், அதை உங்களுக்குக் கொடுத்தாரே.

௰௮ இதோ, அதின் இரத்தம் பரிசுத்தஸ்தலத்திற்குள் கொண்டுபோகப்பட்டதில்லையே; ஆகையால் நீங்கள் அதை நான் கற்பித்தபடி பரிசுத்தஸ்தலத்திலே புசிக்கவே புசிக்கவேண்டியதாய் இருந்தது என்றான்.

௰௯ அப்பொழுது ஆரோன் மோசேயோடே சொன்னதாவது: இதோ, அவர்கள் பாவம்போக்கும் தங்கள் பலியையும், தங்கள் சர்வாங்கதகனபலியையும், கர்த்தருக்கு முன்பாகச் செலுத்தின இன்றுதானே எனக்கு இப்படி நடந்ததே; பாவம்போக்கும்பலியை இன்று புசிப்பேனே, அது கர்த்தரின் பார்வைக்கு நன்றாய் இருக்குமோ என்றான்.

௨௰ மோசே இதைக் கேட்கிறபொழுது அது அவன் பார்வைக்கு நன்றாயிருந்தது.

௰௧. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி, அவர்களோடே சொன்னதாவது:

௨ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது, * பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க சீவன்கள் ஏதெனில், * ௫ மோ. ௰௪. ௪. அப். ௰. ௰௪, ௰௫.

௩ மிருகங்களில் விரிதல்குளம்புள்ளதாய் இருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமானவைகளை எல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

௪ ஆனால் அசைபோடுகிறவைகளிலும், அல்லவென்று விரிதல் குளம்புள்ளவைகளிலும், நீங்கள் புசிக்கத்தகாதது ஏதென்றால் ஒட்டகம்; ஏனெனில் அது அசைபோட்டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௫ குழி முசலும், ஏனெனில் அது அசைபோட்டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௬ முசலும், ஏனெனில் அது அசைபோட்டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௭ பன்றியும், ஏனெனில் அதின் குளம்பு விரிதல்குளம்பும் இரண்டாகப் பிரிந்ததுமாய் இருந்தும் அசைபோடாதிருக்கும், அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௮ இவைகளின் மாம்சத்திலே புசியாமலும் இவைகளின் உடல்களைத் தொடாமலும் இருப்பீர்களாக; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

௯ ¶ தண்ணீர்களிலிருக்கிற யாவிலும் நீங்கள் புசிக்கத்தக்கது ஏதென்றால், கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகும் சிதளும் உள்ளவைகளை எல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

௰ ஆனால் கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களில் நீந்துகிறதும் இருக்கிறதுமான உயிர்ப்பிராணிகளில் எல்லாம் சிறகும் சிதளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.

௰௧ அவைகள் உங்களுக்கு அருவருப்பாய் இருக்கக்கடவது; அவைகளினுடைய மாம்சத்திலே புசியாதிருந்து, அவைகளின் உடல்களை அருவருப்பீர்களாக.

௰௨ தண்ணீர்களிலே சிறகும் சிதளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாய் இருக்கக்கடவது.

௰௩ ¶ பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்கவேண்டியவைகள் எவையென்றால், கழுகும், கருடனும், கடல் உராஞ்சியும்,

௰௪ பருந்தும், சாதி சாதியான வல்லூறும்,

௰௫ சகலவித சாதியான காகங்களும்,

௰௬ தீவுக்குருவியும், கருவாட்டுவாலியும், செம்புகமும், சாதி சாதியான ஆள்காட்டியும்,

௰௭ ஆந்தையும், சகோரப்பட்சியும், கோட்டானும்,

௰௮ வெளவாலும், நாரையும், கோட்டுவானும்,

௰௯ கொக்கும், சாதி சாதியான இராசாளியும், கொண்டலாத்தியும், வரிஞ்சிலும் என்றவைகள்.

௨௰ ¶ பறக்கிறவைகளில் நான்கு காலால் நடமாடுகிற ஊர்வன யாவும் உங்களுக்கு அருவருப்பாய் இருப்பதாக.

௨௧ ஆகிலும் பறக்கிறவைகளில் நான்கு காலால் நடமாடுகிற யாவிலும், நீங்கள் எதைப் புசிக்கலாமென்றால், தரையிலே குதிக்கிறதற்குக் கால்களின்மேலே தொடைகள் உண்டாயிருக்கிறவைகளிலே,

௨௨ வெட்டுக்கிளிச் சாதியாயிருக்கிறதையும், சோலையாம் என்ற கிளிச்சாதியாய் இருக்கிறதையும், அரகொலென்ற கிளிச் சாதியாய் இருக்கிறதையும், ஆகாபென்ற கிளிச்சாதியாய் இருக்கிறதையும், நீங்கள் புசிக்கலாம்.

௨௩ பறக்கிறவைகளில் நான்கு காலுண்டாய் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.

௨௪ அவைகளாலே தீட்டடைவீர்கள்; அவைகளின் உடலைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௫ அவைகளின் உடலைச் சுமந்தவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௬ ¶ விரிதல் நகங்களுள்ளவைகளாய் இருந்தும், அவைகளை இரண்டாகப் பிரியப்பண்ணாமலும், அசைபோடாமலும் இருக்கிற சகல மிருகங்களும் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; அவைகளைத் தொடுகிறவனெல்லாம் தீட்டடைவான்.

௨௭ நான்கு காலால் நடக்கிற சகல சீவன்களிலும் தங்கள் உள்ளங்கால்களை ஊன்றி நடக்கிற யாவும் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; அவைகளின் உடலைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௮ அவைகளின் உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவைகள் உங்களுக்குத் தீட்டுள்ளவைகள்.

௨௯ ¶ தரையோடே ஊருகிற ஊர்வனவைகளில் உங்களுக்குத் தீட்டாயிருப்பவைகள், பெருச்சாளியும், எலியும், சாதி சாதியான ஆமையும்,

௩௰ உடும்பும், அளுங்கும், ஓணானும், பல்லியும், பச்சோந்தியும் என்றவைகள்.

௩௧ சகல ஊர்வனவற்றிலும் இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; செத்த அவைகளைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௩௨ செத்த அவைகளில் யாதொன்று எதின்மேல் விழுகிறதோ, அதுவெல்லாம் தீட்டுப்பட்டிருக்கும், அது எந்த மரமுட்டானாலும், வஸ்திரமானாலும், தோலானாலும், பையானாலும் வேலைசெய்கிற எந்த ஆயுதமானாலும் சரி, தண்ணீரிலே போடப்பட்டு, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பதாக; அப்பொழுது சுத்தமாம்.

௩௩ அவைகளில் யாதொன்று எந்த நவ பாண்டத்திற்குள்ளும் விழுந்தால், அதற்குள் இருக்கின்றவை எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும்; அதையோவென்றால் உடைப்பீர்களாக.

௩௪ புசிக்கிற சகல போசனத்திலும் எதிலே தண்ணீர் வந்திருக்கின்றதோ, அது தீட்டாகும்; குடிக்கிற சகலமும் எந்தப்பாத்திரத்தில் இருந்தாலும் சரி, தீட்டாம்.

௩௫ அவைகளின் உடலில் யாதொன்று எதின்மேல் விழுகிறதோ, அது எல்லாம் தீட்டாம்; அடுப்பும் மண்தொட்டியுமானானும் சரி, தகர்க்கப்படுவதாக, அவைகள் தீட்டுப்பட்டிருக்கும்; ஆகையால் உங்களுக்கு அவைகள் தீட்டாயிருக்கும்.

௩௬ நீர் ஊற்றும் தண்ணீர் உண்டாகிய கிணறுமோவென்றால், சுத்தமாயிருக்கும்; ஆனால் அவைகளின் உடலைத் தொடுகிறவன் தீட்டுப்படுகிறான்.

௩௭ அவைகளின் உடலில் யாதொன்று விதைக்கிற எந்தத் தானியத்தின்மேல் விழுந்தாலும், அது சுத்தமாயிருக்கும்.

௩௮ தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின்மேல் விழுந்ததேயாகில், உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக.

௩௯ ¶ உங்களுக்கு ஆகாரத்திற்கான ஒரு மிருகம் செத்தாலும் அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௪௰ அதின் உடலிலே புசித்தவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் உடலை எடுத்துப்போனவனும் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௪௧ ¶ தரையோடே நகருகிற ஊர்வனவெல்லாம் அருவருப்பாயிருக்கக்கடவது; அவை புசிக்கப்படலாகாது.

௪௨ தரையோடே ஊருகிற சகல ஊர்வனவற்றிலும் வயிற்றாலே நகருகிற யாதொன்றையும், நான்குகாலால் நடக்கிற யாதொன்றையும், அல்லது அநேகம் கால்களுள்ள யாதொன்றையும் புசியீர்களாக; ஏனெனில் அவைகள் அருவருப்பாய் இருக்கின்றவைகள்.

௪௩ ஊருகிற எந்த ஊர்வனவற்றாலும் உங்கள் ஆத்துமாக்களை அருவருப்பாக்காமலும், அவைகளால் தீட்டுப்படாமலும் இருப்பீர்களாக; ஏனெனில் அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்.

௪௪ அதேனென்றால் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்; ஆகையால் உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராய் இருப்பீர்களாக; ஏனெனில் நாம் பரிசுத்தர்; ஆனபடியினாலே தரையோடே ஊருகிற எந்த ஊர்வனவற்றாலும் உங்கள் ஆத்துமாக்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள்.

௪௫ உங்கள் பராபரனாயிருக்கும்படிக்கு நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின கர்த்தர்; ஆகையால்பரிசுத்தராயிருப்பீர்களாக; ஏனெனில் நாம் பரிசுத்தர்.

௪௬ ¶ தீட்டானதற்கும், சுத்தமானதற்கும், புசிக்கப்படும் சீவனுக்கும் புசிக்கப்படாத சீவனுக்கும், வித்தியாசம்பண்ணுவதற்காக,

௪௭ இது மிருகத்திற்கும் பறவைக்கும் தண்ணீர்களில் நீந்துகிற சகல சீவசெந்திற்கும் பூமியின்மேலே ஊருகிற சகல சீவனுக்கும் அடுத்த நியாயப்பிரமாணம் என்று சொல்லுங்களென்றார்.

௰௨. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒரு ஸ்திரீ கர்ப்பம்தரித்து, ஆண்பிள்ளையைப் பெற்றால், அவள் தூரஸ்திரியாய் விலக்கமாயிருக்கிற நாள்களுக்குச் சரியாக ஏழுநாள் தீட்டாயிருப்பாள்.

௩ எட்டாம்நாளிலே அதினுடைய நுனித்தோலின் மாம்சம் சுன்னத்துப் பண்ணப்படக்கடவது.

௪ பிற்பாடு அவள் முப்பத்துமூன்றுநாள் தன் உதிரச் சுத்திகரிப்பிலிருந்து, தன் சுத்திகரிப்பின் நாள்கள் நிறைவேறும்மட்டும், பரிசுத்தமான யாதொரு வஸ்துவைத் தொடவும் பரிசுத்தஸ்தலத்திற்கு வரவும் வேண்டாம்.

௫ பெண்பிள்ளையைப் பெற்றாளேயாகில்,

அவள் இரண்டு வாரம் தூரஸ்திரியாயிருக்கிறதுபோல, தீட்டாயிருந்து, பிற்பாடு அறுபத்தாறு நாள் தன் உதிரச் சுத்திகரிப்பிலிருக்கக்கடவள்.

௬ ¶ ஆண்பிள்ளையை, அல்லது பெண்பிள்ளையைப் பெற்றதற்காக அவள் சுத்திகரிப்பின் நாள்கள் நிறைவேறினபின்பு, அவள் ஒரு வயதான ஆட்டுக்குட்டியைச் சர்வாங்கதகனபலியாகவும், ஒரு புறாக்குஞ்சையாகிலும் காட்டுப்புறாவை என்கிலும் பாவம்போக்கும் பலியாகவும், ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு ஆசாரியனண்டையிலே கொண்டுவரக்கடவள்.

௭ அதை அவன் கர்த்தருக்குமுன்பாகச் செலுத்தி, அவளுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்குவானாக; அப்பொழுது தன் உதிரஊறலில் தீட்டிற்குச் சுத்தமாவாள்; இது ஆண்பிள்ளையை அல்லது பெண்பிள்ளையைப் பெற்றவளின் நியாயப்பிரமாணம்.

௮ ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவள் கைக்கில்லாதிருந்ததேயாகில், அவள் இரண்டு காட்டுப்புறாக்களை, அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளை ஒன்றைச் சர்வாங்கதகனபலியாகவும், மற்றதைப் பாவம்போக்கும் பலியாகவும், கொண்டுவருவாளாக; அதினால் ஆசாரியன் அவளுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருப்பாளென்று சொல்லென்றார்.

௰௩. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨ ஒருமனிதனுடைய மாம்சத்தின் தோலிலே குஷ்டவாதையைப்போலிருக்கிற ஒரு வீக்கமாகிலும் சிரங்காகிலும் வெள்ளை மறு என்கிலும் உண்டானால், அவன் ஆசாரியனாகிய ஆரோனண்டைக்கு, அல்லது ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனண்டைக்குக் கொண்டுவரப்படக்கடவன்.

௩ அப்பொழுது ஆசாரியன் மாம்சத்தின் தோலிலிருக்கிற வாதையின் இடத்தைப் பார்க்கக்கடவன்; அதிலே மயிர் வெண்மையாக மாறினதும் வாதையினிடம் அவன் மாம்சத்தின் தோலைப்பார்க்கிலும் பள்ளமுமாயிருந்தால், அது குஷ்டத்தின் வாதை; ஆசாரியன் அவனைப் பார்த்தபொழுது, அவனைத் தீட்டுள்ளவனாகத் தீர்க்கக்கடவன்.

௪ அவன் மாம்சத்தோலிலே வெள்ளை மறு இருந்தாலும், அவ்விடம் அவன் மாம்சத்தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிராமலும் அதின் மயிர் வெண்மையாக மாறாமலும் இருந்ததாகில், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௫ ஏழாம்நாளிலே அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, வாதையினிடம் தோலிலே அதிகப்படாமல், வாதை அவன் பார்வைக்கு நின்றிருந்தால், ஆசாரியன் இரண்டாம்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௬ இரண்டாம்தரம் அவனை ஏழாம்நாளிலே பார்க்கக்கடவன்; இதோ வாதை தோலிலே அதிகப்படாமல் சுருங்கி இருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது சிரங்குதான்; அவன் தன் வஸ்திரங்களை வெளுத்துச் சுத்தமாயிருப்பானாக.

௭ தன்னைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கிறதற்கு அவன் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பித்தபின்பு, சிரங்கு தோலிலே இடம் கொள்ளவே கொண்டதேயானால், அவன் மறுபடியும் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பிக்கக்கடவன்.

௮ இதோ சிரங்கு தோலிலே இடம் கொண்டதென்று ஆசாரியன் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டம்தானே.

௯ ¶ குஷ்டவாதை ஒரு மனிதனிலிருந்தால், ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரப்படக்கடவன்.

௰ இதோ, தோலிலே வெண்மையான வீக்கமிருந்து அது மயிரை வெண்மையாக

மாறப்பண்ணிற்றென்றும், வீக்கத்திலே பச்சைச் சதையின் குணம் உண்டென்றும், ஆசாரியன் கண்டால்,

௰௧ அப்பொழுது அது அவன் மாம்சத்தின் தோலிலே நாள்பட்ட குஷ்டம்; ஆசாரியன் அவனை அடைத்துவைக்காமல், தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் அவன் தீட்டுள்ளவன்தானே.

௰௨ குஷ்டம் தோலிலே துளிர்க்கவே துளிர்த்து, வாதையுள்ளவனுடைய தலைதுவக்கி அவன் கால்கள்மட்டும் ஆசாரியனுடைய கண்களுக்குத் தெரிகிற எவ்விடமும் தோலை எல்லாம் மூடிக்கொண்டிருந்ததேயானால்,

௰௩ அப்பொழுது ஆசாரியன் பார்த்து, இதோ, குஷ்டம் அவன் மாம்சத்தை எல்லாம் மூடியிருந்தால், அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; எல்லாம் வெண்மையாக மாறிற்று; அவன் சுத்தமானவன்.

௰௪ ஆனால் பச்சைச்சதை அவனில் காணப்படும்நாளிலே அவன் தீட்டுள்ளவன்.

௰௫ ஆகையால் ஆசாரியன் பச்சைச்சதையைக் காணும்பொழுது, அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்ப்பானாக; பச்சைச்சதை தீட்டுள்ளது, அது குஷ்டம்.

௰௬ அல்லவென்று பச்சைச்சதை மாறி வெண்மையாகப்போனால், அவன் ஆசாரியனண்டையில் வருவானாக.

௰௭ ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, வாதையின் இடம் வெண்மையாகமாறிற்றானால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் சுத்தமுள்ளவன்.

௰௮ ¶ மாம்சத்தின் தோலிலே எரிச்சல் உண்டாயிருந்து ஆறிப்போய்,

௰௯ பிற்பாடு அவ்விடத்தில் ஒரு வெள்ளை வீக்கம், அல்லது சிவப்புக்கலந்த ஒரு வெள்ளை மறு உண்டானால், ஆசாரியனுக்குக் காண்பிக்கப்படவேண்டும்.

௨௰ ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் தாழ்ந்ததும் அதின் மயிர் வெண்மையாக மாறினதுமாயிருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்ப்பானாக; அது எரிச்சலிலே எழும்பின குஷ்டம்.

௨௧ ஆசாரியன் அதைப் பார்க்கும்பொழுது, இதோ அதில் வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் தாழ்ந்திராமல், சுருங்கி இருக்கிறதென்றும், கண்டானேயாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௨௨ அது தோலில் இடம் கொள்ளவே கொண்டால், அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது அந்த வாதைதான்.

௨௩ அந்த வெள்ளை மறு அதிகப்படாமல், தன்னிடத்திலே நின்றதேயாகில், அது எரிபந்தத்தினுடைய வடுவாயிருக்கும்; ஆகையால் ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

௨௪ ¶ அல்லது ஒருவனுடைய மாம்சத்தின் தோலிலே நெருப்புப்பட்டதினாலே சூடுண்டாய், சூடாறிப்போன இடத்திலே சிவப்பாகிய அல்லது வெண்மையாகிய மறு உண்டானால்,

௨௫ ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அந்த மறுவிலே மயிர் வெண்மையாக மாறி, அவ்விடம் மற்றத்தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிருந்தால், அது சூட்டினால் எழும்பின குஷ்டம்; ஆகையால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டத்தின் வாதைதான்.

௨௬ ஆசாரியன் அதைப் பார்க்கிறபொழுது, இதோ மறுவிலே வெள்ளைமயிர் இல்லையென்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் தாழ்ந்திராமல் சுருங்கி இருக்கிறதென்றும், கண்டானேயாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௨௭ ஏழாம்நாளில் அவனைப் பார்க்கக்

கடவன்; அது தோலில் இடம்கொள்ளவே கொண்டிருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டத்தின் வாதை.

௨௮ மறுவானது தோலில் இடம்கொள்ளாமல், தன்னிடத்திலே நின்று சுருங்கியிருந்ததேயாகில், அது சூட்டினால் உண்டான வடு; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் அது சூட்டினுடைய சிரங்கு.

௨௯ ¶ ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரிக்காகிலும் தலையிலே அல்லது தாடியிலே ஒரு வாதை உண்டானால்,

௩௰ ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமும் அதிலே மயிர் பொன்நிறமும் கொஞ்சமுமாயிருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனாகத் தீர்க்கக்கடவன்; அது தலையிலே அல்லது தாடியிலே குஷ்டமான சொறியாயிருக்கும்.

௩௧ ஆசாரியன் அதைப் பார்க்கிறபொழுது, இதோ அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிராவிட்டாலும் அதிலே கறுப்பான மயிர் இல்லையென்று கண்டால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௩௨ ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; இதோ அந்தச் சொறி இடம்கொள்ளாமலும், அதிலே பொன்நிற மயிர் இல்லாமலும், அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமல்லாமலும் இருந்தால்,

௩௩ அவன் சிரைத்துக்கொண்டு, சொறியையோ சிரைத்துக்கொள்ளாதிருக்கக்கடவன்; பிற்பாடு ஆசாரியன் இரண்டாம் முறை அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௩௪ ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; இதோ, சொறி தோலில் இடம் கொள்ளாமலும் அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமல்லாமலுமிருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அவன் தன் வஸ்திரங்களை வெளுத்தபின் சுத்தமாயிருப்பான்.

௩௫ அவன் சுத்தமுள்ளவனென்று தீர்க்கப்பட்ட பிறகு அந்தச் சொறி தோலில் இடம்கொள்ளவே கொண்டதானால்,

௩௬ ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, சொறி தோலில் இடம்கொண்டிருந்தால், அப்பொழுது மயிருக்காக அது பொன்நிறமோ என்று ஆசாரியன் விசாரிக்கக் கவலை இல்லை; அவன் தீட்டுள்ளவன்தானே.

௩௭ தன் பார்வைக்கு அந்தச்சொறி நின்று, அதிலே கறுப்புமயிர் முளைத்ததேயாகில், சொறி தாவிளையாயிற்று; அவன் சுத்தமாயிருக்கிறான்; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

௩௮ ¶ ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரிக்காகிலும் அவர்கள் மாம்சத்தின் தோலிலே வெள்ளை மாசுகளாகிய மாசுகளுண்டானால்,

௩௯ ஆசாரியன் பார்க்கக்கடவன்; இதோ, அவர்கள் மாம்சத்தோலிலே சுருங்கினதான வெள்ளை மாசுகளிருந்தால் அது தோலில் எழும்புகிற வெள்ளைத் தேமல்; அவன் சுத்தமுள்ளவன்.

௪௰ ¶ ஒருவனுடைய தலைமயிர் உதிர்ந்து, அவன் மொட்டையனானால், அவன் சுத்தமாயிருக்கிறான்.

௪௧ அவனுடைய முன்னந்தலை மயிர் உதிர்ந்தால், அவன் அரை மொட்டையன்; அவன் சுத்தமாயிருக்கிறான்.

௪௨ மொட்டைத்தலையில் அல்லது அரைமொட்டைத்தலையில் சிவப்புக்கலந்த வெண்மையான நிறம் உண்டாயிற்றேயானால், அது அதிலே எழும்புகிற குஷ்டம்.

௪௩ ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, அவனுடைய மொட்டைத்தலையிலே அல்லது அரைமொட்டைத்தலையிலே மாம்சத்தினுடைய தோலின் குஷ்டத்தைப்போலக் காணப்படுகிற சிவப்புக்கலந்த வெண்மையான வீக்கமிருந்தால்,

௪௪ அவன் குஷ்டரோகி, அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கவே தீர்க்கக்கடவன்; அவன் வாதை அவன் தலையிலே இருக்கின்றது.

௪௫ ¶ வாதை உண்டாயிருக்கிற குஷ்டரோகியின் வஸ்திரங்கள் கிழிந்தவைகளும் அவன் தலை திறந்ததுவுமாய் இருக்கவும், அவன் தன் தாடியை மூடிக்கொண்டிருந்து, தீட்டுள்ளவன், தீட்டுள்ளவுனென்று கூப்பிடவும் வேண்டியது.

௪௬ அந்த வாதை அவனில் இருக்கும் நாளெல்லாம் தீட்டாக எண்ணப்படுவானாக; அவன் தீட்டானவன், தனியே குடியிருப்பானாக; அவன் குடியிருப்புப் பாளயத்திற்குப்புறம்பே இருக்கக்கடவது.

௪௭ ¶ ஆட்டுமயிர் அல்லது பஞ்சுநூல் நெசவான ஒரு வஸ்திரத்திலாகிலும்,

௪௮ பஞ்சுநூலும் அல்லது ஆட்டுமயிருமான பாவிலாகிலும், உண்டைநூலிலாகிலும், ஒரு தோலிலாகிலும், தோலான எந்தவித வேலையிலென்கிலும், குஷ்டத்தின் உரு உண்டாகி,

௪௯ வஸ்திரத்திலாகிலும், தோலிலாகிலும், பாவிலாகிலும், உண்டைநூலிலாகிலும், தோலான எந்தவித வேலையில் என்கிலும், அது கொஞ்சம் பச்சை அல்லது சிவப்பாயிருந்தால், குஷ்டமாயிருக்கும்; அது ஆசாரியனுக்குக் காண்பிக்கப்படக்கடவது.

௫௰ ஆசாரியன் அதைப்பார்த்து ஏழுநாள் அடைத்துவைத்து,

௫௧ ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; வஸ்திரத்திலேயாவது, பாவிலேயாவது, உண்டைநூலிலேயாவது, தோலிலேயாவது, தோலால் எந்தவிதமுமாகச் செய்யப்பட்ட வேலையிலேயாவது, அது அதிகப்பட்டிருந்தால், அது அரிக்கிற குஷ்டமாயிருக்கும் தீட்டாயிருக்கின்றது.

௫௨ அந்த உருவிருக்கிற ஆட்டுமயிரும் அல்லது பஞ்சுநூலுமான வஸ்திரத்தையும், அல்லது பாவையும், அல்லது உண்டைநூலையும், அல்லது தோலான எந்தவிதமுமான பணிமுட்டையும், சுட்டெரிக்கக்கடவன்.

௫௩ ¶ ஏனெனில் அது அரிக்கிற குஷ்டம்; அக்கினியாலே சுட்டெரிக்கப்படுவதாக. ஆனால் வஸ்திரத்திலாகிலும் பாவிலாகிலும் உண்டைநூலிலாகிலும் தோலான எந்தவிதமுமான பணிமுட்டிலென்கிலும் இதோ அந்த உருவத்திலே அதிகப்பட்டதில்லை என்று ஆசாரியன் கண்டால்,

௫௪ அப்பொழுது ஆசாரியன் அதைக் கழுவச்சொல்லி, இரண்டாம்முறை ஏழுநாள் அடைத்துவைத்து,

௫௫ அது கழுவப்பட்டபின்பு, அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அந்த உரு அதிகப்படாதிருந்தாலும் மாறாததாயிருந்தால் தீட்டாயிருக்கும்; அக்கினியால் அதைச் சுட்டெரிக்கவேண்டும்; அது அதின் உன்புறத்திலானாலும் வெளிப்புறத்திலானாலும் உருவ அரிக்கிறதாயிருக்கின்றது.

௫௬ கழுவப்பட்டபின்பு, இதோ, அது குறுகிற்றென்று ஆசாரியன் கண்டானேயாகில், அதை வஸ்திரத்திலே, அல்லது தோலிலே, அல்லது பாவிலே, அல்லது உண்டைநூலிலே, இராதபடிக்குக் கிழித்துப்போடவேண்டும்.

௫௭ அது இன்னம் வஸ்திரத்திலாகிலும் பாவிலாகிலும் உண்டைநூலிலாகிலும் தேவையான எந்தவிதமுமான பணிமுட்டிலென்கிலும் காணப்பட்டதேயானால், அது துளிர்க்கிறதாயிருக்கும்; ஆகையினால் அதை அக்கினியாலே சுட்டெரிக்கவேண்டும்.

௫௮ வஸ்திரமும் அல்லது பாவும் அல்லது உண்டைநூலும் அல்லது எந்தவிததோல் பணிமுட்டும் கழுவப்பட்டபின்பு, அந்த உருவு அதைவிட்டுப்போயிற்றேயானால், அது இரண்டாம்முறை கழுவப்படட்டும், அப்பொழுது சுத்தமாயிருக்கும்.

௫௯ ¶ ஆட்டுமயிர் அல்லது பஞ்சுநூல் நெசவான வஸ்திரத்தையாகிலும், பாவையாகிலும், உண்டைநூலையாகிலும், எந்தவிததோல் பணிமுட்டை என்கிலும் சுத்த

மாக அல்லது திட்டாகத் தீர்க்கிறதற்கு, இது அதினுடைய குஷ்டவாதைக்கடுத்த நியாயப்பிரமாணமென்றார்.

௰௪. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளிலே அவனுக்கடுத்த நியாயப்பிரமாணம் என்னவெனில், *அவன் ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரப்பட, ஆசாரியன் பாளயத்திற்குப்புறம்பே போகவேண்டும். *மத். ௮. ௪.

௩ இதோ, குஷ்டரோகியின் குஷ்டவாதை குணமாயிற்றென்று ஆசாரியன் கண்டால்,

௪ அவன் சுத்திகரிக்கப்படப்போகிறவனுக்காக, சுத்தமாயிருக்கிற உயிருள்ள இரண்டு குருவிகளையும், ஒருகேதுருக்கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் வாங்கிவரக் கற்பிப்பானாக.

௫ பிற்பாடு ஆசாரியன் அந்தக் குருவிகளில் ஒன்றை ஒரு மண்பாண்டத்திலுள்ள சுரப்புத் தண்ணீர்மேல் கழுத்தை அறுக்கச் சொல்லி,

௬ உயிருள்ள குருவியையும், கேதுருக் கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும், எடுத்துக்கொண்டு இவைகளையும் உயிருள்ள குருவியையும் சுரப்புத் தண்ணீரின்மேல் கழுத்தறுக்கப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து,

௭ குஷ்டமறச் சுத்திகரிக்கப்படப்போகிறவன்மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச் சுத்தம்பண்ணி, உயிருள்ள குருவியை வெளியின் விசாலத்திலே விட்டுவிடக்கடவன்.

௮ ¶ சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மயிரையெல்லாம் சிரைத்து, தான் சுத்தமாகும்படிக்கு, தண்ணீரிலே முழுகி, பிற்பாடு பாளயத்திற்குள் பிரவேசித்து, தன் கூடாரத்திற்குப் புறம்பே ஏழுநாள் தங்கி,

௯ ஏழாம்நாளிலே தன் தலையையும், தாடியையும், புருவங்களையும், தன்னுடைய எல்லா மயிரையும் சிரைத்து, தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரினாலே கழுவிச் சுத்தமாயிருப்பானாக.

௰ எட்டாம்நாளிலே அவன் பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண்குட்டியையும், ஒரு மரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் மூன்று பங்கான எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும், ஒரு ஆழாக்கெண்ணெயையும் கொண்டுவரக்கடவன்.

௰௧ சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிற மனிதனையும் அவைகளையும் கர்த்தருக்குமுன்பாக ஆசரிப்புக்கூடாரவாசலிலே நிறுத்தக்கடவன்.

௰௨ பிற்பாடு ஆசாரியன் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதையும் அந்த ஆழாக்கெண்ணெயையும் குற்றம்போக்குகிறதற்காகக் கொண்டுவந்து, கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டும் காணிக்கையாக அசைவாட்டி,

௰௩ பாவம்போக்கும்பலியும் சர்வாங்கதகனபலியும் குரல்வளை அறுக்கப்படுகிற பரிசுத்தஸ்தலத்திலே அந்த ஆட்டுக்குட்டியைக் குரல்வளை அறுப்பானாக; ஏனெனில் குற்றம்போக்கும்பலி, பாவம்போக்கும் பலியைப்போல ஆசாரியனுடையது; அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௰௪ குற்றம்போக்கும் அந்தப் பலியின் இரத்தத்திலே ஆசாரியன் கொஞ்சம் பிடித்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரல்மேலும், வலதுகாதின் பெருவிரல்மேலும் பூசக்கடவன்.

௰௫ பிற்பாடு ஆசாரியன் அந்த ஆழாக்கெண்ணெயிலே கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்து,

௰௬ அதிலே தன் வலதுவிரலைத் தோய்த்து, தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து, கர்த்தருக்குமுன்பாகத் தெளித்து,

௰௭ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை எண்ணெயிலே கொஞ்சம் சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரல்மேலும், வலதுகாலின் பெருவிரல்மேலும் முந்தப் பூசியிருக்கிற குற்றம்போக்கும்பலியினுடைய இரத்தத்தின்மீதில் பூசி,

௰௮ தன் உள்ளங்கையில் இருக்கிற குறை எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையிலே தடவி, கர்த்தருக்கு முன்பாக அவனுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

௰௯ பாவம்போக்கும்பலியையும் செலுத்தி, சுத்திகரிக்கப்படுகிறவனுக்காக அவன் தீட்டறப் பாவநிவிர்த்தியை உண்டாக்கிப் பிற்பாடு சர்வாங்கதகனபலியைக் குரல்வளை அறுத்து,

௨௰ அதையும் காணிக்கையையும் பலிபீடத்தின்மேல் ஏற்றி, அவனுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருப்பான்.

௨௧ ¶ அவன் தரித்திரனும் அம்மாத்திரம் அவகாசம் அற்றவனுமேயானால் அவன் தன் பாவநிவிர்த்திக்கென்று குற்றம்போக்கும்பலியாகவும் அசைவாட்டும் காணிக்கையாகவும் ஒரு ஆட்டுக்குட்டியையும், ஒருமரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கான எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும், ஒரு ஆழாக்கெண்ணெயையும்,

௨௨ தன் அவகாசத்திற்குத்தக்கவைகளாக இரண்டு காட்டுப்புருக்களையாகிலும் இரண்டு புருக்குஞ்சுகளை என்கிலும், ஒன்று பாவம்போக்கும்பலியும் மற்றது சர்வாங்கதகனபலியுமாகும்படிக்கு வாங்கி,

௨௩ தன் சுத்திகரிப்பின் எட்டாம்நாளிலே ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குமுன்பாக ஆசாரியனண்டையிலே கொண்டுவருவானாக.

௨௪ அப்பொழுது ஆசாரியன் குற்றம்போக்கும் ஆட்டுக்குட்டியையும் அந்த ஆழாக்கெண்ணெயையும் வாங்கி, கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டும் காணிக்கையாக அசைவாட்டி,

௨௫ குற்றம்போக்கும் ஆட்டுக்குட்டியின் குரல்வளையை அறுத்து, அதின் இரத்தத்திலே கொஞ்சம் பிடித்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும் அவன் வலதுகையின் பெருவிரல்மேலும் வலதுகாலின் பெருவிரலின்மேலும் பூசி,

௨௬ அந்த எண்ணெயிலே கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்து,

௨௭ இதிலிருக்கும் எண்ணெயிலே தன் வலது விரலால் எடுத்து, கர்த்தருக்குமுன்பாக ஏழுதரம் தெளித்து,

௨௮ தன் உள்ளங்கையிலிருக்கிற எண்ணெயிலே கொஞ்சம் சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரல்மேலும், வலதுகாலின் பெருவிரல்மேலும் குற்றம்போக்கும் பலியின் இரத்தம் பூசி இருக்கிற இடத்தின்மீதில் பூசி,

௨௯ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையின்மேல் அவன்நிமித்தம் கர்த்தருக்குமுன்பாகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கும்படிக்குத் தடவி,

௩௰ பிற்பாடு அவன் தன் அவகாசத்திற்குத்தக்கவைகளாகக் கொண்டுவந்தவைகள், காட்டுப்புருக்களானாலும் சரி, புருக்குஞ்சுகளானாலும் சரி,

௩௧ அவைகளில் ஒன்றைப் பாவம்போக்கும்பலியும், மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி, காணிக்கையோடேகூடச் செலுத்தி, இப்படியே ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிறவன்நிமித்தம் கர்த்தருக்குமுன்பாகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

௩௨ ¶ இது தன் சுத்திகரிப்புக்கு அவகாசம் போதாதிருக்கிற குஷ்டவாதையுள்ளவனுடைய நியாயப்பிரமாணம் என்றார்.

௩௩ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடும்

ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௩௪ நாம் உங்களுக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான்தேசத்திலே நீங்கள் வந்தபின்பு, நாம் உங்கள் காணியாட்சியான தேசத்தில் ஒரு வீட்டிலே குஷ்டவாதையை வரப்பண்ணினால்,

௩௫ அப்பொழுது அந்த வீட்டிற்கு உடையவன் வந்து, வீட்டிலே வாதையைப்போலிருக்கிறதாக எனக்குக் காண்கிறதென்று ஆசாரியனுக்கு அறிவிக்கக்கடவன்.

௩௬ அப்பொழுது வீட்டிலிருக்கிற யாவும் தீட்டாகாதபடிக்கு, ஆசாரியன் அந்த வாதையைப்பார்க்க வரும்முன்னே, வீட்டை ஒழித்துவைக்கச்சொல்லி, பிற்பாடு வீட்டைப் பார்க்கவந்து,

௩௭ அந்த வாதையிருக்கிற இடத்தைப் பார்க்கக்கடவன்; இதோ, வீட்டுச்சுவர்களிலே கொஞ்சம் பச்சையும் கொஞ்சம் சிவப்புமான குழிகளிருந்து, அவைகளின் உருவு சுவரைப்பார்க்கிலும் பள்ளமாயிருந்தால்,

௩௮ ஆசாரியன் வீட்டிலிருந்து வாசல்படியிலே புறப்பட்டு, வீட்டை ஏழுநாள் அடைத்துவைத்து,

௩௯ ஏழாம்நாளிலே திரும்பவந்து, இதோ வாதை வீட்டுச் சுவர்களில் இடம்கொண்டதென்று கண்டால்,

௪௰ அவன் அவ்விடத்திலிருக்கிற கல்லுகளைப் பேர்க்கவும், பட்டணத்திற்குப் புறம்பே தீட்டான ஒரு ஸ்தலத்திலே போடவும் கற்பித்து,

௪௧ வீட்டை உள்ளே சுற்றிலும் சிவச்சொல்லி, சிவிப்போட்ட மண்ணைப் பட்டணத்திற்குப் புறம்பே தீட்டான ஒரு ஸ்தலத்திலே கொட்டவும்,

௪௨ வேறே கல்லுகளை எடுத்துவந்து, அந்தக் கல்லுகளுக்குப் பதிலாகக்கட்டி, வேறே மண்ணை எடுத்து வீட்டைப்பூசவும் சொல்லுவானாக.

௪௩ கல்லுகளைப் பேர்த்து, வீட்டைச் சிவி, நவமாய்ப் பூசினபிற்பாடு, அந்த வாதை திரும்ப வீட்டில் எழும்பிற்றேயானால்,

௪௪ ஆசாரியன் வந்து பார்க்கக்கடவன்; இதோ, வாதை வீட்டில் இடம்கொண்டதாகில், அது வீட்டிலே அரிக்கிற குஷ்டமானது; தீட்டாயிருக்கின்றது.

௪௫ ஆகையால் வீட்டை எல்லாம் அதின் கல்லுகளையும், மரங்களையும், அதின் மண்ணையும் இடித்து, பட்டணத்திற்குப்புறம்பே தீட்டான ஸ்தலத்திலே கொண்டுபோகவேண்டும்.

௪௬ வீடு அடைக்கப்பட்ட நாளெல்லாம் அதற்குள் பிரவேசிக்கிறவன் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௪௭ வீட்டிலே படுத்துக்கொண்டவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; வீட்டிலே சாப்பிட்டவனும் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்.

௪௮ ¶ ஆசாரியன் திரும்பவந்து, இதோ, வீடு பூசப்பட்டபிறகு வீட்டிலே அந்த வாதை இடம்கொண்டதில்லை என்று கண்டானேயாகில், அவன் அந்த வீட்டைச் சுத்தமென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் வாதை நிவிர்த்தி ஆயிற்று.

௪௯ அப்பொழுது வீட்டின் பாவத்தைப் போக்க, இரண்டு குருவிகளையும் கேதுருக் கட்டையையும் சிவப்புநூலையும் ஈசோப்பையும் வாங்கி,

௫௰ ஒரு குருவியை ஒரு மண்பாண்டத்திலுள்ள சுரப்புத் தண்ணீரின்மேலே கழுத்தறுத்து,

௫௧ கேதுருக்கட்டையையும், ஈசோப்பையும், சிவப்புநூலையும், உயிருள்ள குருவியையும் எடுத்துக்கொண்டு, இவைகளைக் கழுத்தறுக்கப்பட்ட குருவியின் இரத்தத்திலும் சுரப்புத்தண்ணீரிலும் தோய்த்து, வீட்டின்மேல் ஏழுதரம் தெளித்து,

௫௨ குருவியின் இரத்தத்தினாலும், சுரப்புத்தண்ணீரினாலும், உயிருள்ள குருவியினாலும், கேதுருக்கட்டையினாலும், ஈசோப்பினாலும், சிவப்புநூலினாலும், வீட்டின் பாவத்தைப்போக்கி,

௫௩ உயிருள்ள குருவியைப் பட்டணத்திற்குப்புறம்பே வெளியின் விசாலத்திலே விட்டுவிட்டு, இப்படியே வீட்டிற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருக்கும்.

௫௪ ¶ இது சகலவித குஷ்டவாதைக்கும், சொறிக்கும்,

௫௫ வஸ்திரத்தின் குஷ்டத்திற்கும், வீட்டின் குஷ்டத்திற்கும்,

௫௬ வீக்கத்திற்கும், சிரங்குக்கும், வெள்ளை மறுவுக்கும், அடுத்த நியாயப்பிரமாணம்.

௫௭ எப்பொழுது தீட்டானதென்றும், எப்பொழுது சுத்தமானதென்றும், போதிக்கிறதற்கு இது குஷ்டத்திற்கு அடுத்த நியாயப்பிரமாணமென்றார்.

௰௫. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், எவனொருவன் மாம்சத்திலே பிரமியமுண்டானால், அவன் தன் பிரமியத்தினாலே தீட்டானவன்.

௩ அவனுடைய மாம்சத்திலே பிரமியம் ஊற்றினாலும், அவன் மாம்சப்பிரமியம் அடைபட்டிருந்தாலும், அது அவனிலே தீட்டாயிருக்கும்.

௪ பிரமியக்காரன் படுக்கிற படுக்கையெல்லாம் தீட்டாம்; அவன் எதின்மேல் உளுக்காருகிறானோ, அதுவெல்லாம் தீட்டாம்.

௫ அவன் படுக்கையைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரிலே முழுகக்கடவன்; சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௬ பிரமியக்காரன் உளுக்காந்ததின்மேல் உளுக்காருகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௭ அவன் மாம்சத்தைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரிலே முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௮ அவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல் துப்பினால், இவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரிலே முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௯ அவன் எதின்மேல் ஏறிப்போகிறானோ, அது எல்லாம் தீட்டாம்.

௰ அவன்கீழிருந்த எதையாகிலும் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதை எடுத்துச் சுமக்கிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௰௧ அவன் தன் கைகளைத் தண்ணீரினாலே கழுவாதிருக்கும்போது, எவனையாகிலும் தொட்டால், அவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௰௨ அவன் தொட்டிருக்கிற மண்பாண்டம் உடைக்கப்படவும் மரப்பாண்டமெல்லாம் தண்ணீரில் அலசப்படவும் கடவது.

௰௩ அவன் தன் பிரமியம் அறச் சுத்தமானால், அவன் தன் சுத்திகரிப்புக்கென்று ஏழுநாள் எண்ணிக்கொண்டு, தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைச் சுரப்புத்தண்ணீரிலே கழுவக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருக்கிறான்.

௰௪ எட்டாம்நாளிலோவெனில், அவன் இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும், இரண்டு புறாக்குஞ்சுகளையாகிலும், ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து, ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவன்.

௰௫ ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவம்போக்கும்பலியும் மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி, அவனுக்காகக் கர்த்தரின் சந்நிதியிலே, அவன் பிரமியத்தினிமித்தம் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

௰௬ ¶ இந்திரியம் ஒருவனிலிருந்து கழிந்த

னுண்டானால், அவன் தன் மாம்சத்தை எல்லாம் தண்ணீரிலே கழுவி, சாயங்காலம் மட்டும் தீட்டாயிருப்பானாக.

௰௭ கழிந்த இந்திரியம் பட்ட சகல வஸ்திரமும் சகல தோலும் தண்ணீரினாலே கழுவப்பட்டு, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பதாக.

௰௮ இந்திரியம் கழிந்தவனோடே பெண்சாதி படுத்துக்கொண்டிருந்தால், இருவரும் தண்ணீரிலே முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டாயிருப்பார்களாக.

௰௯ ¶ தன் மாம்சத்திலே உதிரம் ஓடுகிற ஸ்திரி ஏழுநாள் தன் விலக்கத்தில் இருக்கக்கடவள்; அவளைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௰ அவள் விலகி இருக்கையில், எதின்மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ, எதின்மேல் உளுக்காருகிறாளோ, அதெல்லாம் தீட்டாம்.

௨௧ அவள் படுக்கையைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨௨ அவள் உளுக்காந்த யாதொரு மணையைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨௩ அவள் படுக்கையின்மேலும், அல்லது அவள் உளுக்காந்த மணையின்மேலும் இருந்த எதையாகிலும் தொட்டவன், சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௪ ஒருவன் அவளோடே படுக்கவே படுத்துக்கொண்டதும் அவள் தீட்டு அவன் மேலே பட்டதும் உண்டானால், அவன் ஏழுநாள் தீட்டாயிருப்பான்; அவன் படுக்கிற படுக்கையுமெல்லாம் தீட்டுப்படும்.

௨௫ ¶ ஒரு ஸ்திரி விலகியிருக்கும்காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேகம்நாள் ஓடவே ஓடி, அல்லது அந்தக் காலத்திற்கு மிஞ்சி ஓடினால், அவள் அது ஓடுகிற நாளெல்லாம் தன் விலக்கத்தின் நாள்களைப்போலத் தீட்டாயிருப்பாள்.

௨௬ அந்தச் சகல நாளும் அவள் படுக்கிற படுக்கை எல்லாம், அவளுக்கு அவள் விலக்கத்தின் படுக்கைக்குச் சரியாய் இருப்பதாக; அவள் எதின்மேல் உளுக்காருகிறாளோ, அது அவளுடைய விலக்கத்தின் தீட்டைப்போலத் தீட்டாயிருக்கும்.

௨௭ அப்படிக்கொத்தவைகளைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨௮ அவள் தன் உதிரம் அறச் சுத்தமானால், அவள் ஏழுநாள் எண்ணிக்கொள்வாளாக; பிற்பாடு சுத்தமாயிருப்பாள்.

௨௯ எட்டாம்நாளிலோவெனில், இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும், இரண்டு புறாக்குஞ்சுகளை என்கிலும் ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனண்டைக்குக் கொண்டு வரக்கடவள்.

௩௰ ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவம்போக்கும்பலியும் மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி, அவளுக்காகக் கர்த்தரின் சந்நிதியில் அவளுடைய உதிர ஓடலின்நிமித்தம் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

௩௧ ¶ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நடுவே இருக்கிற நம்முடைய வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, தங்கள் தீட்டுகளால் சாவாதபடிக்கு, இப்படி நீங்கள் அவர்கள் தீட்டுகளுக்கு அவர்களை விலக்கிவைக்க வேண்டும்.

௩௨ ¶ இது பிரமியக்காரனுக்கும், இந்திரிய நஷ்டமானதினாலே தீட்டானவனுக்கும்,

௩௩ தன் விலக்கத்திலே பலவீனப்பட்டவளுக்கும், மாம்சம் உருகியிருக்கிற ஆண் சாதிக்கும் பெண்சாதிக்கும், தீட்டாயிருக்கிறவளோடே படுத்துக்கொண்டவனுக்கும், செல்லும் நியாயப்பிரமாணமென்று சொல்லுங்களென்றார்.

௰௬. அதிகாரம்.

௧ ஆரோனின் இரண்டு குமாரர் *கர்த்தரின் சந்நிதியிலே சேருகையில் செத்துப்போன பிற்பாடு, கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது: *௩ மோ. ௰. ௧,௨.

௨ உன் சகோதரனாகிய ஆரோன் சாவாதபடிக்கு, பரிசுத்தஸ்தலத்திலே திரைக்குட்புறத்திலிருக்கிறபெட்டியின்மீதிலுள்ள கிருபாசனமான மூடிக்குமுன்பாக சகல வேளையிலும் வரவேண்டாமென்று அவனுக்குச் சொல்; ஏனெனில் கிருபாசனமான மூடியின்மீதில் மேகத்திலே காணப்படுவோம்.

௩ ஆரோன் பரிசுத்தஸ்தலத்துக்குள் பிரவேசிக்கப்போனால், ஒரு காளை எருதைப் பாவம்போக்கும்பலியாகவும், ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்கதகனபலியாகவும், செலுத்திப் பிரவேசிக்கவேண்டும்.

௪ அவன் பரிசுத்தமான பஞ்சுநூல் சட்டையை உடுத்து, தன் மாம்சத்தின்மேலே பஞ்சுநூல் சல்லடத்தைப் போட்டு, பஞ்சுநூல் நடுக்கட்டைக் கட்டி, பஞ்சுநூல் பாகையைப் போட்டுக்கொண்டிருக்கவேண்டும்; இவைகள் பரிசுத்தமான வஸ்திரங்கள்; அவன் தன் மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவி, அவைகளை உடுத்துக்கொண்டு,

௫ இஸ்ரவேல் புத்திரருடைய சபையின் கையிலே, பாவம்போக்கும்பலியாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், சர்வாங்கதகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கி,

௬ ¶ பிற்பாடு தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கும்படிக்கு, தன்னுடைய பாவம்போக்குதலின் காளை எருதைச் சேரப்பண்ணி,

௭ அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து, ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குமுன்பாக நிறுத்தி,

௮ அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களின்மேலே ஒரு சீட்டைக் கர்த்தருக்கென்றும், பின்னொரு சீட்டைப் போகவிடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்றும் போட்டு,

௯ கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவம்போக்கும் பலியாக்குகிறதற்குச் சேரப்பண்ணி,

௰ போகவிடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவையோவென்றால், அதின்மேலே பாவநிவிர்த்தியை உண்டாக்கி, அதை வனாந்தரத்திலே போகவிடுகிறதற்குக் கர்த்தருக்குமுன்பாக உயிரோடே நிறுத்தி,

௰௧ ¶ பிற்பாடு தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்குகிறதற்கு, தன்னுடைய பாவம்போக்குதலின் காளை எருதைச் சேரப்பண்ணி, அதின் குரல்வளையை அறுத்து,

௰௨ கர்த்தருக்குமுன்பாகப் பலிபீடத்தின்மேலிருக்கிற தணலினால் கலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கங்களிலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்குள்ப்புறமாகக் கொண்டுவந்து,

௰௩ தூபத்தின் மேகம் சாட்சியின்மேலிருக்கிற கிருபாசனமான மூடியைத் தான் சாவாதபடிக்கு மூடத்தக்கதாக, தூபவர்க்கத்தைக் கர்த்தருக்குமுன்பாக அக்கினியின்மேலே போட்டு,

௰௪ பிற்பாடு காளை எருதின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினாலே கிருபாசனமான மூடியின்மேலே தெளித்து, எழுமுறை தன் விரலினால், அந்த இரத்தத்தில் எடுத்து கிருபாசனமான மூடிக்குமுன்பாகவும் தெளிப்பானாக.

௰௫ ¶ பிற்பாடு அவன் சனத்தினுடைய பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடாவைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்தைத் திரைக்குள்ப்புறமாகக் கொண்டுவந்து, தான் காளை எருதின் இரத்தத்தாலே செய்ததுபோல, அதின் இரத்தத்தாலும்

செய்து, அதைக் கிருபாசனமான மூடியின்மேலும், அதற்குமுன்பாகவும் தெளித்து,

௰௬ இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகள் நிமித்தமும், அவர்களுடைய எல்லாப் பாவங்களிலும் உண்டான மீறுதல்களின் நிமித்தமும் பரிசுத்தஸ்தலத்திற்காக, பாவநிவிர்த்தியை உண்டாக்கி, இந்தவிதமாக அவர்களிடத்தில் அவர்கள் தீட்டுகளின் நடுவே தங்கியிருக்கிற ஆசரிப்பின் கூடாரத்திற்காகச் செய்யக்கடவன்.

௰௭ அவன் பாவநிவிர்த்தியை உண்டாக்கப் பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறது முதல்கொண்டு, அவன் புறப்படும்மட்டும், ஒரு மனிதனும் ஆசரிப்பின் கூடாரத்தில் இருக்கவேண்டாம்; அவன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேலின் முழுச்சபைக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

௰௮ புறப்பட்டு, கர்த்தருக்குமுன்பாக இருக்கிற பீடத்தண்டை வந்து, அதற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கி, காளை எருதின் இரத்தத்திலும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்திலும் கொஞ்சம் பிடித்து, கொம்புகளின்மேலே சுற்றிலும் பூசி,

௰௯ தன் விரலினால் அந்த இரத்தத்தில் எடுத்து, எழுதரம் அதின்மேலே தெளித்து, அதை இஸ்ரவேல் புத்திரரின் தீட்டுகள் அறச் சுத்திகரிக்கவும் பரிசுத்தமாக்கவும் கடவன்.

௨௰ ¶ அவன் பரிசுத்தஸ்தலத்திற்கும் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் பீடத்திற்குமாக, பாவநிவிர்த்தியை இப்படி உண்டாக்கித் தீர்ந்தபிற்பாடு, உயிரோடே இருக்கிற வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ணி,

௨௧ அதினுடைய தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய எல்லா அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களால் உண்டாகிய அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேலே சுமத்தி, அதை அதற்கான ஆள்கையிலே வனாந்தரத்திற்கு அனுப்பிவிடக்கடவன்.

௨௨ அந்த வெள்ளாட்டுக்கடா தன்மேலே அவர்களுடைய அக்கிரமங்களை எல்லாம் வெட்டிப்போடப்படுதலின் தலத்திற்குச் சுமந்துகொண்டு போவதாக; பிறகு அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே போகவிடக்கடவன்.

௨௩ ¶ ஆரோனோவெனில் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் வந்து, தான் பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறபொழுது உடுத்திருந்த பஞ்சுநூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு,

௨௪ தன் மாம்சத்தைப் பரிசுத்த இடத்திலே தண்ணீரினாலே கழுவி, தன்னுடைய வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு புறப்பட்டு, தன்னுடைய சர்வாங்கதகனத்தையும் சனத்தின் சர்வாங்கதகனத்தையும் படைத்து, தனக்காகவும் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

௨௫ பாவம்போக்கும்பலியின் கொழுப்பைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்.

௨௬ போகவிடப்படும் வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டுபோய் விட்டவன், தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரினாலே கழுவிப் பிற்பாடு பாளயத்தில் வருவானாக.

௨௭ குரல்வளை அறுக்கப்பட்டு, இரத்தம் பாவநிவிர்த்திக்கென்று பரிசுத்தஸ்தலத்திற்குள் கொண்டுபோகப்பட்ட பாவம்போக்குதலின் காளை எருதையும், பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடாவையும், பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய், அவைகளின் தோல்களையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவர்கள்.

௨௮ அவைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரினாலே கழுவி, பிற்பாடு

பாளயத்தில் வருவானாக.

௨௯ ¶ ஏழாம்மாதம் பத்தாம் தேதியிலே நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதும், தேசத்திலே பிறந்தவனானாலும் சரி, உங்கள் நடுவே தங்குகிற பரதேசியானாலும் சரி, ஒரு வேலையையும் செய்யாதிருப்பதும், உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது.

௩௰ ஏனெனில் உங்களைச் சுத்திகரிக்கும்படிக்கு, அந்நாளில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கப்படும்; கர்த்தருக்கு முன்பாக உங்களுடைய எல்லாப் பாவங்களும் அறச் சுத்திகரிக்கப்படுவீர்கள்.

௩௧ உங்களுக்கு அது ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; இது நித்தியகட்டளை.

௩௨ அபிஷேகம்பண்ணப்பட்டவனும், தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியம்செய்யக் கைநிரப்பப்பட்டவனுமாகிய ஆசாரியனே, பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய பஞ்சுநூல் வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு,

௩௩ பரிசுத்தமாகிய பரிசுத்தஸ்தலத்திற்கும் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் பீடத்திற்குமாக, பாவநிவிர்த்தியை உண்டாக்கி, ஆசாரியருக்காகவும் சபையின் எல்லாச் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

௩௪ இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய எல்லாப் பாவங்களுக்கும் நிவிர்த்தியை உண்டாக்குவது உங்களுக்கு நித்தியகட்டளையாய் இருக்கக்கடவதென்று சொல்லென்றார்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே ஆரோன் செய்தான்.

௰௭. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் பேசி, அவர்களுக்குச் சொல்லவேண்டியது, கர்த்தர் கற்பித்த வார்த்தை என்னவெனில்,

௩ இஸ்ரவேல் வீட்டாரில் எவனாகிலும் மாட்டையாகிலும் ஆட்டையாகிலும் வெள்ளாட்டை என்கிலும் ஆசரிப்புக்கூடாரவாசலென்ற கர்த்தரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக, கர்த்தருக்குச் செலுத்தும்படிக்குக் கொண்டுவராமல்,

௪ அதைப் பாளயத்திலாகிலும் பாளயத்திற்குப் புறம்பேயாகிலும் குரல்வளை அறுத்தால், அது அந்த மனிதனுக்குப் பழியாக எண்ணப்படும்; அவன் இரத்தம் சிந்திப்போட்டான், அந்த மனிதன் தன் சனத்திற்குள் இராமல், அறுப்புண்பான்.

௫ ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் வெளியின் விசாலத்திலே பலியிடுகிற தங்கள் பலிகளை, ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனண்டையிலே கர்த்தருக்குக் கொண்டுவந்து, அங்கே அவருக்குச் சமாதானபலிகளாகச் செலுத்தக்கடவர்கள்.

௬ அங்கே ஆசாரியன் இரத்தத்தை ஆசரிப்புக்கூடாரவாசலிலிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தின்மேலே தெளித்து, கொழுப்பைக் கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்தக்கடவன்.

௭ தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற பேய்களுக்கு, தங்கள் பலிகளை இனிச் செலுத்தார்களாக; இது அவர்கள் தலைமுறைகளில் அவர்களுக்கு நித்தியகட்டளையாயிருக்கக்கடவது.

௮ ¶ ஆகையால் நீ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில் இஸ்ரவேல் வீட்டாரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் ஒருவனாகிலும் சர்வாங்கதகனமுதலான பலியைப் பலியிட்டு,

௯ அதை ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குச் செலுத்தும்படிக்குக் கொண்டுவாராவிட்டால், அவன் தன் சனத்தாருக்குள் இராமல் அறுப்புண்பான்.

௰ ¶ இஸ்ரவேல் வீட்டாரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலும் *இரத்தமென்னப்பட்டதைப் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக நாம் நமது முகத்தைத் திருப்பி, அவனை அவன் சனத்திற்குள் இராதபடிக்கு அறுப்போம். *௩ மோ. ௩. ௰௭.

௰௧ ஏனெனில் *மாம்சத்தின் உயிர் இரத்தத்திலுள்ளது; நாம் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக, பாவநிவிர்த்தியை உண்டாக்கும்படிக்குக் கட்டளையிட்டோம்; ஏனெனில் அது ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்குகிற இரத்தம். *௧ மோ. ௯. ௪.

௰௨ அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்கவேண்டாம்; உங்கள் நடுவே தங்குகிற பரதேசியும் இரத்தம் புசிக்கவேண்டாமென்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னோம்.

௰௩ ¶ இஸ்ரவேல் புத்திரரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலும் புசிக்கத்தக்க ஒரு மிருகத்தை அல்லது ஒரு பட்சியை வேட்டையாடிப் பிடித்தால், அவன் அதின் இரத்தத்தைச் சிந்தப்பண்ணி, மண்ணினால் மூடக்கடவன்.

௰௪ ஏனெனில் சகல மாம்சத்திற்கும் அது சீவனாயிருக்கிறது; அதின் இரத்தம் சீவனுக்குச் சரி; ஆகையால் இஸ்ரவேல் புத்திரருக்கு எந்தமாம்சத்தின் இரத்தத்தையும் புசியீர்களாக; ஏனெனில் சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தம்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்பானென்றோம்.

௰௫ ¶ தேசத்திலே பிறந்தவர்களிலும் பரதேசிகளிலும் செத்த உடலை, அல்லது பீறுண்டதைப் புசித்திருக்கிறவன் எல்லாம், தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பானாக; பிற்பாடு சுத்தமாயிருப்பான்.

௰௬ அவன் தன் வஸ்திரங்களை வெளுக்காமலும் தன் மாம்சத்தைக் கழுவாமலும் போனால், தன் அக்கிரமத்தைச் சுமப்பானென்று சொல்லென்றார்.

௰௮. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களுக்குச் சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩ நீங்கள் குடியிருந்த எகிப்துதேசத்தினுடைய செய்கையின்படி செய்யாமலும், நாம் உங்களை அழைத்துப்போகிற கானான் தேசத்தினுடைய செய்கையின்படி செய்யாமலும், அவர்களுடைய முறைமைகளில் நடவாமலும்,

௪ நம்முடைய நியாயங்களின்படியே செய்து, நம்முடைய கட்டளைகளையே அவைகளில் நடக்கும்படிக்குக் கைக்கொள்ளக்கடவீர்கள்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௫ ஆகையால் நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிற மனிதன் *அவைகளாலே பிழைப்பான்; நாம் கர்த்தர். *எசே. ௨௰. ௰௧.

௬ ¶ ஒருவனும் தனக்குக் கிட்டின சதையாகிய ஒருத்தியோடும் அவளுடைய நிருவாணத்தைத் திறக்கிறதற்குச் சேரவேண்டாம்; நாம் கர்த்தர்.

௭ உன் தகப்பனுடைய நிருவாணத்தையும் உன் தாயின் நிருவாணத்தையும் திறவாயாக; அவள் உன் தாயானவள்; அவள் நிருவாணத்தைத் திறவாயாக.

௮ உன் தகப்பனுடைய பெண்சாதியின் நிருவாணத்தைத் திறவாயாக; அது உன் தகப்பனுடைய நிருவாணம்.

௯ உன் தகப்பனுக்கு, அல்லது உன் தாய்க்குக் குமாரத்தியாகிய உன் சகோதரி, வீட்டிலே பிறந்திருந்தாலும் புறத்திலே பிறந்திருந்தாலும் சரி, அவளுடைய நிருவாணத்தைத் திறவாயாக.

௰ உன் குமாரனுடைய மகளின் நிருவாணத்தையாகிலும் உன் குமாரத்தியினுடைய மகளின் நிருவாணத்தையென்கிலும் திறவாயாக; ஏனெனில் அது உன்னுடைய நிருவாணம்.

௰௧ உன் தகப்பனுக்கு அவன் பெண்சாதியினிடத்திலே பிறந்த குமாரத்தியின் நிருவாணத்தைத் திறவாயாக; அவள் உனக்குச் சகோதரி.

௰௨ உன் தகப்பனுடைய சகோதரியின் நிருவாணத்தைத் திறவாயாக; அவள் உன் தகப்பனுடைய சதையானவள்.

௰௩ உன் தாயினுடைய சகோதரியின் நிருவாணத்தைத் திறவாயாக; ஏனெனில் அவள் உன் தாயின் சதையானவள்.

௰௪ உன் தகப்பனுடைய சகோதரன் நிருவாணத்தைத் திறவாயாக; அவன் பெண்சாதியோடே சேராயாக; அவள் உனக்குச் சிறியதாய்.

௰௫ உன் மருமகளின் நிருவாணத்தைத் திறவாயாக; அவள் உன் குமாரனுக்குப் பெண்சாதி, அவளுடைய நிருவாணத்தைத் திறவாயாக.

௰௬ உன் சகோதரனுடைய பெண்சாதியின் நிருவாணத்தைத் திறவாயாக; அது உன் சகோதரனுடைய நிருவாணம்.

௰௭ ஒரு பெண்சாதியோடேகூட அவள் மகளின் நிருவாணத்தையும் திறவாயாக; அவளுடைய குமாரரின் மகளையும் அல்லது அவள் குமாரத்தியின் மகளையும் இவளுடைய நிருவாணத்தைத் திறக்கும்படிக்கு விவாகம்பண்ணாயாக; இப்படிக்கொத்தவர்கள் அவளுடைய சதையானவர்கள்; அது தோஷம்.

௰௮ பெண்சாதியண்டையிலே உயிரோடே இருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக, அவள் சகோதரியின் நிருவாணத்தையும் திறக்கிறதற்கு இவளைக்கூட விவாகம் பண்ணாயாக.

௰௯ ¶ பெண்சாதி தன் விலக்கத்தில் இருக்கையில், அவளுடைய நிருவாணத்தைத் திறக்கும்படிக்கு அவளோடே சேராயாக.

௨௰ நீ உனக்கடுத்தவனுடைய பெண்சாதிக்கு உன் அநுபோகத்தைக் கொடுக்கவும் அவளால் உன்னைத் தீட்டாக்கவும் வேண்டாம்.

௨௰௧ நீ உன் வித்தில் எதையாகிலும் தீயைக் கடக்கிறதற்கு மோளேகுக்குக் கொடுக்கிறதினால், உன் பராபரனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காயாக; நாம் கர்த்தர்.

௨௰௨ ஸ்திரியின் அநுபோகமாய் ஆணோடே சயனிக்காயாக; அது அருவருப்பானது.

௨௰௩ யாதொரு மிருகத்தினிடத்தில் நீ உன் அநுபோகத்தைக் கொடுக்கவும் அதினால் உன்னைத் தீட்டாக்கவும் வேண்டாம்; ஸ்திரி மிருகத்தின் முன்னின்று, அதைத் தன்மேல் ஏறப்பண்ணவும் வேண்டாம்; அது அருவருப்பான தாறுமாறு.

௨௰௪ ¶ இவைகளில் ஒன்றினாலும் உங்களைத் தீட்டாக்காதிருப்பீர்களாக; ஏனென்றால் நாம் உங்களுக்கு முன்பாகத் துரத்துகிற சாதிகள் இவைகளால் எல்லாம் தங்களைத் தீட்டாக்கினதினாலே தேசம் தீட்டாயிற்று.

௨௰௫ ஆனதுகொண்டு தேசம் தன் குடிகளைக் கக்கிப்போடத்தக்கதாக, அதினுடைய அக்கிரமத்தை விசாரிக்கிறேம்.

௨௰௬ ஏனெனில் இந்த அருவருப்புகளை எல்லாம் உங்களுக்கு முன்னிருந்த அந்தத் தேசத்தின் மனிதர் செய்ததினாலே தேசம் தீட்டாயிற்று.

௨௰௭ இப்பொழுதும் உங்களுக்கு முன்னிருந்த சாதிகளைத் தேசம் கக்கிப்போட்டது போல, அது உங்களையும் நீங்கள் அதைத் தீட்டாக்கும்பொழுது கக்கிப்போடாதபடிக்கு,

௨௰௮ நீங்கள் நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் சரி, உங்கள் நடுவே தங்குகிற பரதேசியானாலும் சரி, இந்த அருவருப்புகளில் ஒன்றை

யும் செய்யாதிருப்பீர்களாக.

௨௯ ஏனென்றால் எவர்களாகிலும் இந்த எல்லா அருவருப்புகளிலும் யாதொன்றைச் செய்தால், செய்த அந்த ஆத்துமாக்கள் தங்கள் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்பார்கள்.

௩௰ ஆகையால் உங்களுக்கு முன்நடந்த அருவருப்பான முறைமைகளில் யாதொன்றின்படியே நீங்கள் செய்து, அவைகளால் தீட்டாகாதபடிக்கு, நம்முடைய கட்டளையைக் கைக்கொள்வீர்களாக; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார்.

௰௯. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் பேசிச் சொல்லவேண்டியதேதெனில், *பரிசுத்தவான்களாய் இருக்கக்கடவீர்கள்; ஏனெனில் உங்கள் பராபரனான கர்த்தராகிய நாம் பரிசுத்தர். *௧ பே. ௧. ௰௬.

௩ ¶ நீங்கள் அவனவன் தன் தன் தாய்க்கும் தன் தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும் நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்கொள்ளவும் கடவீர்கள்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௪ ¶ விக்கிரகங்களை நோக்காமலும் வார்ப்பிக்கப்பட்ட தேவர்களை உங்களுக்கு உண்டாக்காமலும் இருப்பீர்களாக; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௫ ¶ நீங்கள் சமாதானபலியைக் கர்த்தருக்குச் செலுத்தினால், அதை உங்கள் மனப்பூர்வத்தினாலே செலுத்துவீர்களாக.

௬ நீங்கள் அதைச் செலுத்துகிற அந்நாளிலும் மறுநாளிலும் அது புசிக்கப்படவும் மூன்றாம் நாள்மட்டும் மீதியானது அக்கினியாலே சுட்டெரிக்கப்படவும்கடவது.

௭ மூன்றாம்நாளில் அதில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால், ஓக்காளிப்பாயிருக்கும்; பிரியமாயிராது.

௮ அப்படிப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்; ஏனெனில் கர்த்தருக்குப் பரிசுத்தமானதைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினான்; அந்த ஆத்துமா தன் சனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

௯ ¶ உங்கள் தேசத்தில் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும்,

௰ உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக, நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௰௧ ¶ களவுசெய்யாமலும் பொய்சொல்லாமலும் ஒருவர்க்கொருவர் கபடுபண்ணாமலும்,

௰௨ நமது நாமத்தைக்கொண்டு பொய்யாணை இடுகிறதினால், உங்கள் பராபரனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.

௰௩ உனக்கடுத்தவனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலுமிருப்பாயாக; கூலிக்காரனுடைய கூலி உன்னிடத்தில் விடியற்காலம்மட்டும் இராத்தங்கவேண்டாம்.

௰௪ ¶ செவிடனைச் சபிக்காமலும், குருடன்முன்பாகத் தடுக்கலை வைக்காமலும், உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக; நாம் கர்த்தர்.

௰௫ ¶ நியாயத்திலே நியாயக்கேடு செய்யீர்களாக; சிறியவனுடைய முகத்தைப் பாராமலும், பெரியவனுடைய முகத்தை எண்ணாமலும், உனக்கடுத்தவனுக்கு நீதியாக நியாயம் தீர்ப்பாயாக.

௰௬ ¶ உன் சனத்தாருக்குள்ளே பின்புறணிக்காரனாய்த் திரியாயாக; உனக்கடுத்தவனுடைய இரத்தத்திற்கு விரோதமாய் நிற்காயாக; நாம் கர்த்தர்.

௰௭ ¶ உன் சகோதரனை உன் இருதயத்தி

லே பகையாயாக; உனக்கடுத்தவன்மேலே பாவத்தை இருக்க ஒட்டாமல், அவனைக் கடிந்துகொள்ளவே கொள்வாயாக.

௰௮ சரிக்குச்சரிக்கட்டாமலும், உன் சனப்புத்திரர்மேலே கோபம்வைக்காமலும், உனக்கடுத்தவனை உன்னைப்போலச் சிநேகிப்பாயாக; நாம் கர்த்தர்.

௰௯ ¶ நம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக; உன் மிருகசீவன்களை வேற்றுச்சாதியோடே கூட்டிவிடாயாக; உன் வயலில் வெவ்வேறுவகை விதையை விதையாயாக; இருவகை நூலுள்ள வஸ்திரம் உன்மேல் ஏறாதிருப்பதாக.

௨௰ ¶ ஒருவனுக்கு அடிமையாயிருந்து, அவனால் இகழ்ச்சியாக்கப்பட்டும், மீட்கப்படாமலும் தன் இச்சையாய் விடப்படாமலும் போன பெண்ணோடே ஒருவன் அநுபோகமாய்ச் சயனித்தால், அவர்கள் சாவாமல் அடிக்கப்படவேண்டும்; ஏனெனில் அவள் தன்னிச்சையானவளல்ல.

௨௧ அவன் தன் குற்றத்தைப்போக்கும் பலியாக, கர்த்தருக்கு ஒரு ஆட்டுக்கடாவை ஆசரிப்புக்கூடாரவாசலிலே கொண்டுவரக்கடவன்.

௨௨ அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தினிமித்தம் அவனுக்குக் கர்த்தருக்கு முன்பாகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது அவன் செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும்.

௨௩ ¶ நீங்கள் தேசத்திலே வந்து, புசிக்கும் கனிகளைத் தருகிற பலவித மரங்களை வைத்தால், அவைகளின் கனியைச் சுன்னத்துப்பண்ணிப்போடக்கடவீர்கள்; மூன்று வருஷம் அது புசிக்கப்படாமல், உங்களுக்குச் சுன்னத்தில்லாததாய் எண்ணப்படுவதாக.

௨௪ பிறகு நான்காம் வருஷத்திலே அவைகளின் கனி எல்லாம் கர்த்தருக்குத் துதி செலுத்தப் பரிசுத்தமாயிருப்பதாக.

௨௫ ஐந்தாம் வருஷத்திலோவென்றால், அவைகளின் கனியைப் புசிக்க, அவைகள் உங்களுக்குத் தங்கள் பலனைக் கொடுத்துவரக்கடவது; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௨௬ ¶ இரத்தத்தோடிருக்கிறதைப் புசியீர்களாக; நிமித்தம்பாராமலும் நாள்நலைப் பாராமலும் இருப்பீர்களாக.

௨௭ உங்கள் தலைமயிரைச் சுற்றிலும் ஒதுக்காமலும் தாடியின் ஓரங்களைக் கெடுக்காமலும்,

௨௮ செத்தவனுக்காக உங்கள் மாம்சத்தைக் கீறிக்கொள்ளாமலும் அடையாளமான எழுத்தை உங்களிலே போடாமலும் இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.

௨௯ ¶ தேசம் வேசித்தனம்பண்ணித் தோஷத்தால் நிறையப்படாதபடிக்கு, உன் குமாரத்தியை வேசித்தனம்பண்ணவிடுகிறதினாலே பரிசுத்தக்குலைச்சலாக்காயாக.

௩௰ ¶ நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்கொண்டு, நம்முடைய பரிசுத்தஸ்தலத்திற்குப் பயப்படுவீர்களாக; நாம் கர்த்தர்.

௩௧ அஞ்சனம்பார்க்கிறவர்களையும் குறிகாரரையும் நோக்காதிருப்பீர்களாக; அவர்களைத் தேடி, அவர்களாலே தீட்டுப்படீர்களாக; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௨ ¶ நரைத்தவனுக்குமுன்பாக எழுந்து. முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக; நாம் கர்த்தர்.

௩௩ ¶ பரதேசி உங்கள் தேசத்தில் உன்னோடே தங்கினால், அவனைச் சிறுமைப்படுத்தீர்களாக.

௩௪ உங்களிடத்திலே தங்குகிற பரதேசி உங்களுக்குத் தேசத்திலே பிறந்தவனைப்போல இருப்பானாக; அவனை உன்னைப்போல சிநேகிப்பாயாக; ஏனெனில் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௫ ¶ நியாய விசாரணையிலும் அளவிலும் நிறுக்கிற நிறையிலும் படியிலும் நியாயக்கேடு செய்யீர்களாக.

௩௬ சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான படிக்கட்டும் சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்கக்கடவது; நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௭ ஆகையால் நம்முடைய எல்லாக் கட்டளைகளையும் நம்முடைய எல்லா நியாயங்களையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; நாம் கர்த்தரென்று சொல்லென்றார்.

௨௰. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ பின்னையும் நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது ஏதெனில், இஸ்ரவேல் புத்திரரிலும் இஸ்ரவேலிலே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலும் தன் வித்திலே யாதொன்றை மோளேகுக்குக் கொடுத்தால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; தேசத்தின் சனம் அவனைக் கல்லெறிவதாக.

௩ நாம் அப்படிக்கொத்தவனுக்கு விரோதமாக நமது முகத்தைத் திருப்பி, அவன் நமது பரிசுத்தஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, நமது பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கும்படிக்கு, தன் வித்தை மோளேகுக்குக் கொடுத்தபடியினாலே, அவனைத் தன் சனத்தாரில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

௪ அப்படிக்கொத்தவன் தன் வித்திலே யாதொன்றை மோளேகுக்குக் கொடுக்கும்போது, தேசத்தின் சனம் அவனைக் கொலைசெய்யாதபடிக்கு, தங்கள் கண்களை அவனைவிட்டு மறைக்கவே மறைத்தால்,

௫ நாம் அந்த மனிதனுக்கும் அவன் வம்சத்திற்கும் விரோதமாக நம்முடைய முகத்தைத் திருப்பி, அவனையும், அவன் பிறகாலே மோளேகோடே விபசாரம்பண்ண அவனைப் பின்தொடர்ந்து சோரம்போன யாவரையும், தங்கள் சனத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

௬ *அஞ்சனம்பார்க்கிறவர்களையும் குறிகாரரையும் பின்தொடர்ந்து சோரம்போக, எந்த ஆத்துமா அவர்களைநோக்கி இருக்கிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாகவும் நமது முகத்தைத் திருப்பி, அவனைத் தன் சனத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம். *௩ மோ. ௰௯. ௩௧.

௭ ஆனபடியினாலே உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தவான்களாயிருங்கள்; ஏனெனில் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௮ நம்முடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யுங்கள்; நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

௯ ¶ எவனாகிலும் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தால், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக.

௰ ¶ ஒருவனுடைய பெண்சாதியோடே எவனொருவனாகிலும் விபசாரம்பண்ணினால், அப்பொழுது தனக்கடுத்தவன் பெண்சாதியோடே விபசாரம்பண்ணின அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்.

௰௧ ¶ தன் தகப்பன் பெண்சாதியோடே சயனிக்கிறவன் தன் தகப்பன் நிருவாணத்தைத் திறந்தான், இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

௰௨ ¶ ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால், இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; தாறுமாறுபண்ணினார்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

௰௩ ¶ ஒருவன் ஸ்திரீயின் அநுபோகமாக ஆணோடே சயனித்தால், அருவருப்பான காரியம்செய்த இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; அவர்கள்

இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

௰௪ ¶ ஒருவன் ஒரு பெண்சாதியையும் அவள் தாயையும் படைத்தால், அது தோஷம்; உங்கள் நடுவே தோஷமிராதபடிக்கு, அவனையும் இவர்களையும் அக்கினியாலே சுட்டெரிப்பார்களாக.

௰௫ ஒருவன் மிருகத்தினிடத்திலே தன் அதபோகத்தை விட்டால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; அந்த மிருகத்தையும் கொல்லக்கடவீர்கள்.

௰௬ ஒரு ஸ்திரி யாதொரு மிருகத்தோடே அதைத் தன்மேல் ஏறப்பண்ணிச் சேர்ந்தால், அந்த ஸ்திரியையும் அந்த மிருகத்தையும் கொல்லக்கடவாய்; இருசீவனும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவது; அவைகளின் இரத்தப்பழி அவைகளின்மேல் இருப்பதாக.

௰௭ ¶ ஒருவன் தன் தகப்பனுக்கு அல்லது தன் தாய்க்குக் குமாரத்தியாகிய தன் சகோதரியைச் சேர்த்துக்கொண்டு, அவன் இவள் நிருவாணத்தையும் இவள் அவன் நிருவாணத்தையும் பார்த்தால், அது பாதகம்; அவர்கள் தங்கள் சனப்புத்திரரின் கண்களுக்குமுன்பாக அறுப்புண்ணக்கடவர்கள்; தன் சகோதரியின் நிருவாணத்தைத்திறந்த அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௰௮ ஒருவன் தூரஸ்திரியோடே சயனித்து, அவளுடைய நிருவாணத்தையும் ஊற்றையும் திறந்து, அவளும் தன் உதிரத்தின் ஊற்றைத் திறந்துவைத்தால், இருவரும் தங்கள் சனத்தாரின் நடுவிலிராதபடிக்கு அறுப்புண்ணக்கடவர்கள்.

௰௯ ¶ உன் தாயினுடைய சகோதரியின் நிருவாணத்தையும் உன் தகப்பனுடைய சகோதரியின் நிருவாணத்தையும் திறவாயாக, அப்படிக்கொத்தவன் தன் சதையை அவமானமாக்கினான்; தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்.

௨௰ ஒருவன் தன் சிற்றப்பன் பெண்சாதியோடே சயனித்தால், அவன் தன் சிற்றப்பன் நிருவாணத்தைத் திறந்தான்; தங்கள் பாவத்தைச் சுமப்பார்கள், சந்தானமில்லாமல் சாவார்களாக.

௨௰௧ ஒருவன் தன் சகோதரன் பெண்சாதியைப் படைத்தால், அது அசுத்தம்; தன் சகோதரன் நிருவாணத்தைத் திறந்தான். சந்தானம் அற்றிருப்பார்கள்.

௨௰௨ ¶ ஆகையால் நீங்கள் குடி இருப்பதற்காக நாம் உங்களைக் கொண்டுபோகிற தேசம் உங்களைக் கக்கிப்போடாதபடிக்கு, நீங்கள் நம்முடைய சகல கட்டளைகளையும் சகல நியாயங்களையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யுங்கள்.

௨௰௩ நாம் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடுகிற சாதியினுடைய வழிபாடுகளில் நடவாதிருங்கள்; ஏனெனில் அப்படிக்கொத்த காரியங்களையெல்லாம் செய்தார்கள்; ஆகையால் நாம் அவர்களை அரோசித்து,

௨௰௪ நீங்கள் அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பீர்களென்று உங்களோடே சொன்னோம்; பாலும் தேனும் ஒடிய அந்தத் தேசத்தை உங்களுக்குச் சுதந்தரமாகவும் கொடுப்போம்; நாம் உங்களைச் சனசதனங்களை விட்டுப் பிரித்தெடுத்த உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௨௰௫ ¶ ஆகையால் சுத்தமான மிருகங்களுக்கும் தீட்டான மிருகங்களுக்கும், தீட்டான பறவைகளுக்கும் சுத்தமான பறவைகளுக்கும், நீங்கள் வித்தியாசம்பண்ணி, நாம் உங்களுக்குத் தீட்டாக எண்ணச்சொல்லி விலக்கின மிருகங்களாலும் பறவைகளாலும் தரையோடே ஊருகிற யாதொன்றாலும் உங்கள் ஆத்துமாக்களை அருவருப்பாக்காதிருப்பீர்களாக.

௨௰௬ நமக்குப் பரிசுத்தவான்களாய் இருப்பீர்களாக, ஏனெனில் கர்த்தராகிய நாம் பரிசுத்தராயிருந்து, நீங்கள் நம்முடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களைச் சனசதனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தோம்.

௨௰௭ *அஞ்சனம்பார்க்கிற ஆவியுள்ள, அல்

லது குறிசொல்லுகிற மனிதனாகிலும் ஸ்திரியாகிலும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; அவர்களைக் கல்லெறிவார்களாக; அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல் இருக்கக்கடவதென்று சொல்லென்றார். *௨ மோ. ௨௨. ௰௮.

௨௧. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களில் ஒருவனும் தன் சனத்தாரில் செத்துப்போன ஒருவராலே தன்னைத் தீட்டுப்படுத்தவேண்டாமென்று அவர்களோடே சொல்.

௨ தன்னுடைய கிட்டின சதையாகிய தன் தாயினாலும், தன் தகப்பனாலும், தன் குமாரனாலும், தன் குமாரத்தியாலும், தன் சகோதரனாலும்,

௩ புருஷனுக்கு வாழ்க்கைப்படாமல் தன் கிட்ட இருந்த கன்னியாஸ்திரியான தன் சகோதரியாலுமே ஒழிய,

௪ வேறொருவராலும் தன் சனத்தாரிலே பெரியவனாகிய அவன் தன்னைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, தீட்டுப்படுத்தவேண்டாம்.

௫ அவர்கள் தங்கள் தலையை மொட்டையிடாமலும் தங்கள் தாடியின் ஓரங்களைச் சிரைத்துப்போடாமலும் தங்கள் மாம்சத்தைக் கீறிக்கொள்ளாமலும் இருப்பார்களாக.

௬ தங்கள் பராபரனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சல் ஆக்காமல், அவருக்குப் பரிசுத்தராயிருப்பார்களாக; ஏனெனில் கர்த்தரின் தகனங்களென்ற தங்கள் பராபரனுடைய அப்பத்தை அவர்கள் செலுத்தி, பரிசுத்தமாயிருக்கிறார்கள்.

௭ சோரஸ்திரியையும் பரிசுத்தம் குலைந்தவளையும் விவாகம்பண்ணார்களாக; தன் புருஷனாலே தள்ளப்பட்ட பெண்சாதியையும், விவாகம்பண்ணார்களாக; ஏனெனில் அவன் தன் பராபரனுக்குப் பரிசுத்தமானவன்.

௮ அவனைப் பரிசுத்தனென்று எண்ணுவாயாக; ஏனெனில், உன் பராபரனுடைய அப்பத்தைச் செலுத்துகிறான்; உனக்குப் பரிசுத்தனாயிருப்பானாக; ஏனெனில் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நாம் பரிசுத்தர்.

௯ ஆசாரியனுடைய குமாரத்தி வேசித்தனம்பண்ணத்துவக்கினால், அவள் தன் தகப்பனைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறாள்; அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவள்.

௰ ¶ சிரசில் அபிஷேகத்தெண்ணெய் வார்க்கப்பட்டவனும் வஸ்திரங்களைத் தரிக்கக் கைநிரப்பப்பட்டவனுமாகிய தன் சகோதரரிலிருக்கிற பிரதான ஆசாரியனோவெனில், தன் தலையைத் திறவாமலும், தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளாமலும்,

௰௧ செத்த எந்தச் சவத்தண்டையிலும் வராமலும், தன் தகப்பனாலும் தன் தாயாலும் தன்னைத் தீட்டுப்படுத்தாமலும்,

௰௨ பரிசுத்தஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் பராபரனுடைய பரிசுத்தஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பானாக; ஏனெனில் அவனுடைய பராபரனின் அபிஷேகத்தெண்ணெய் என்ற கிரீடம் அவன்மேல் இருக்கிறது; நாம் கர்த்தர்.

௰௩ கன்னியாஸ்திரியாகிய பெண்ணை அவன் விவாகம்பண்ணுவானாக.

௰௪ அவன் கைம்பெண்சாதியையானாலும், தள்ளப்பட்டவளையானாலும், பரிசுத்தம் குலைந்தவளையானாலும், வேசியையானாலும் விவாகம்பண்ணாமல், தன் சனத்தாரிலுள்ள ஒரு கன்னியாஸ்திரியை விவாகம்பண்ணி,

௰௫ தன்னுடைய வித்தைத் தன் சனத்தாருக்குள்ளே பரிசுத்தகுலைச்சலாக்காதிருப்பானாக; ஏனெனில் நாம் அவனைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று சொல்லென்றார்.

௰௬ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௭ நீ ஆரோனோடே பேசவேண்டியதே

தெனில் உன் வித்தாராகிய உன் தலைமுறையாரில் அங்கவீனமுள்ளவன் தன் பராபரனுடைய அப்பத்தைச் செலுத்தச் சேர ஒண்ணாது.

௰௮ அங்கவீனமுள்ள ஒருவனும் சேரவேண்டாம்; குருடனானாலும், சப்பாணியானாலும், குறைந்த அல்லது நீண்ட அவயவமுள்ளவனானாலும்,

௰௯ காலொடிந்தவனானாலும், கை ஒடிந்தவனானாலும்,

௨௰ கூனனானாலும், நேர்ந்த உடம்பினனானாலும், பூப்பட்ட கண்ணனானாலும், சொறியனானாலும், படுவனுள்ளவனானாலும், விதை நசுங்கினவனானாலும் சரி,

௨௧ ஆசாரியனாகிய ஆரோனின் வித்தாரில் அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின் தகனங்களைச் செலுத்தச் சேரவேண்டாம்; அங்கவீனம் அவனிலிருக்கையால், அவன் தன் பராபரனுடைய அப்பத்தைச் செலுத்தச் சேரஒண்ணாது.

௨௨ தன் பராபரனுடைய அப்பமாகிய பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானவைகளிலும் பரிசுத்தமானவைகளிலும் அவன் புசிக்கலாம்.

௨௩ ஆனால் திரையண்டை வாராமலும் பீடத்தண்டையில் சேராமலும் இருப்பானாக; ஏனெனில் அங்கவீனம் அவனிலிருக்கின்றது; நம்முடைய பரிசுத்தஸ்தலத்தை அவன் பரிசுத்தக்குலைச்சலாக்கவேண்டாம்; ஏனெனில் நாம் அவர்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தரென்று சொல்லென்றார்.

௨௪ ¶ மோசே இவைகளை ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னான்.

௨௨. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ இஸ்ரவேல் புத்திரர் நமக்கு நியமித்துச் செலுத்துகிற பரிசுத்தவஸ்துக்களால் ஆரோனும் அவன் குமாரரும் நம்முடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதபடிக்கு, எச்சரிக்கையோடே இருக்கவேண்டும் என்று அவர்களோடே சொல்; நாம் கர்த்தர்.

௩ நீ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், உங்கள் தலைமுறைகளிலுள்ள உங்கள் எல்லா வித்தாரிலும் எவனாகிலும் தன்மேலே தீட்டிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு நியமித்துச் செலுத்துகிற பரிசுத்தவஸ்துக்களண்டையில் சேர்ந்தால், அந்த ஆத்துமா நமக்கு முன்பாக இராதபடிக்கு அறுப்புண்பான்; நாம் கர்த்தர்.

௪ ஆரோனின் வித்தாரில் எவன் குஷ்டரோகியோ, எவன் பிரமியக்காரனோ, அவன் சுத்தமாகும்மட்டும், பரிசுத்தவஸ்துக்களிலே புசிக்கவேண்டாம்; செத்த உடலாலே தீட்டானதெதையாகிலும் தொட்டவனும், அல்லது இந்திரியம் கழிந்தவனும்,

௫ அல்லது தீட்டுப்படுத்துகிற யாதொரு ஊர்வதையாகிலும் எந்தத் தீட்டுமுள்ள மனிதனையாகிலும் தொட்டவனும், அப்படித்தானே.

௬ அப்படித் தொட்டவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் பரிசுத்தவஸ்துக்களிலே புசியாமல், தன் மாம்சத்தைத் தண்ணீரினால் கழுவக்கடவன்.

௭ சூரியன் அஸ்தமித்தபிற்பாடு சுத்தமாயிருப்பான்; பிறகு அவன் பரிசுத்தவஸ்துக்களிலே புசிக்கலாம்; ஏனெனில் அது அவனுடைய அப்பம்.

௮ தானாய்ச் செத்ததையும் பீறுண்டதையும் அவன் புசிக்கிறதினாலே தீட்டுப்படவேண்டாம்; நாம் கர்த்தர்.

௯ ஆகையால் பரிசுத்தமானதை அவர்கள் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறதினாலே, தங்கள்மேலே பாவம் சுமத்திச்சாவாதபடிக்கு, நம்முடைய காவலைக் காக்கக்கடவர்கள்; நாம் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

௰ ¶ அந்நியன் ஒருவனும் பரிசுத்தவஸ்

துக்களிலே புசிக்கவேண்டாம்; ஆசாரியன் வீட்டில் விடுதியாயிருக்கிறவனும் கூலிவேலைசெய்கிறவனும் பரிசுத்தவஸ்துவிலே புசிக்கவேண்டாம்.

௰௧ ஆசாரியன் தன் பணத்தினாலே கொண்டவனும் அவன் வீட்டிலே பிறந்தவனுமோவெனில், அவனுடைய அப்பமாகிய அதிலே புசிப்பார்களாக.

௰௨ ஆசாரியனுடைய குமாரத்தி பிறனுக்கு வாழ்க்கைப்பட்டால், பரிசுத்தவஸ்துக்களின் படைப்பிலே புசிக்கவேண்டாம்.

௰௩ கைம்பெண்சாதியாய்ப்போன, அல்லது தள்ளப்பட்டவளான ஆசாரியனுடைய குமாரத்தி வித்தில்லாதிருந்து, தன் தகப்பன் வீட்டிலே தன்னுடைய இளவயதிலிருந்ததுபோல, திரும்பிவந்து இருந்தாளேயாகில், தன் தகப்பன் அப்பத்திலே புசிப்பாளாக; ஆனால் அந்நியனாகிய ஒருவனும் அதிலே புசிக்கவேண்டாம்.

௰௪ ஒருவன் அறியாமல் பரிசுத்தவஸ்துவிலே புசித்ததுண்டானால், அவன் அதிலே ஐந்தில் ஒருபங்கை அதிகமாகக்கூட்டி, பரிசுத்தவஸ்துவோடுங்கூட ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவன்.

௰௫ அவர்கள் கர்த்தருக்கு ஏறெடுக்கிற இஸ்ரவேல் புத்திரரின் பரிசுத்தவஸ்துக்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும்,

௰௬ அவைகளைப் புசிக்கிறதிலே அவர்கள்மேலே குற்றமான அக்கிரமத்தைச் சுமரப்பண்ணாமலும் இருப்பார்களாக; ஏனெனில் நாம் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று சொல்லென்றார்.

௰௭ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௮ நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் பேசிச் சொல்லவேண்டியதேதெனில், இஸ்ரவேல் வீட்டாரிலும் இஸ்ரவேலிலே தங்குகிற பரதேசிகளிலும் எவர்கள் தங்களுடைய சகல பொருத்தனைகளின்படியாகிலும் உற்சாகத்தின்படியாகிலும் சர்வாங்கதகனமாகக் கர்த்தருக்குத் தங்கள் காணிக்கையைச் செலுத்தப்போகிறார்களோ,

௰௯ அவர்கள் தங்கள் மனதின்படியே மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆண்சீவனைப் பிடித்துவந்து செலுத்துவார்களாக.

௨௰ பழுதுள்ள ஒன்றையும் செலுத்தீர்களாக; ஏனெனில் அது உங்களுக்காகக் கர்த்தருக்குப் பிரியமாய் இருப்பதில்லை.

௨௧ ஒருவன் விசேஷித்த பொருத்தனைக்காக, அல்லது உற்சாகமனதாக, கர்த்தருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் சமாதானபலியைச் செலுத்தப்போனால், அது பிரியமாய் இருக்கும்படிக்கு ஒரு பழுதுமில்லாத உத்தமமாயிருக்கவேண்டும்.

௨௨ குருடு, நெரிசல், ஊனம், கழிச்சல், சொறி, புண்ணுள்ளது முதலானவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும், அவைகளாலே கர்த்தருக்குப் பலிபீடத்தின்மேலே தகனபலியை ஏற்றாமலும் இருப்பீர்களாக.

௨௩ நீண்ட, அல்லது குறைந்த அவயவமுள்ள மாட்டையும் ஆட்டையும் நீ உற்சாகபலியாக்கலாம்; ஆனால் பொருத்தனைக்காக அது பிரியமாயிருப்பதில்லை.

௨௪ நசுங்கினதையும் நொறுங்கினதையும் காயம்பட்டதையும் விதை அறுக்கப்பட்டதையும் நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும் உங்கள் தேசத்திலே பலியிடாமலும் இருப்பீர்களாக.

௨௫ அந்நிய புத்திரன்கையிலும் இப்படிக்கொத்ததை வாங்கி, உங்கள் பராபரனுடைய அப்பமாகச் செலுத்தீர்களாக; ஏனெனில் அவைகளின் கேடும் பழுதும் அவைகளில் இருக்கின்றன; அவைகள் உங்களுக்காகப் பிரியமாயிருப்பதில்லை என்று சொல்லென்றார்,

௨௬ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௭ ஒரு கன்று, அல்லது ஆட்டுக்குட்டி, அல்லது வெள்ளாட்டுக்குட்டி பிறந்தால்

அது ஏழுநாள் தன் தாயின்கீழ் இருக்கக்கடவது; எட்டாம்நாள் முதல்கொண்டு, அது கர்த்தருக்குத் தகனகாணிக்கையாகச் செலுத்தப்படப் பிரியமாயிருக்கும்.

௨௮ மாட்டையும் அதின் கன்றையும், அல்லது ஆட்டையும் அதின் குட்டியையும், ஒரேநாளிலே குரல்வளை அறுக்கீர்களாக.

௨௯ ஸ்தோத்திரப்பலியைக் கர்த்தருக்குச் செலுத்தினீர்களானால், உங்கள் மனப்பூர்வத்தால் அதைச் செலுத்துவீர்களாக.

௩௰ அந்நாளிலேதானே அது புசிக்கப்படுவதாக; விடியற்காலம்மட்டும் நீங்கள் அதில் ஒன்றும் மீதியாக வைக்கவேண்டாம்; நாம் கர்த்தர்.

௩௧ ¶ நம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; நாம் கர்த்தர்.

௩௨ நாம் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தமாக்கப்பட, நம்முடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிருப்பீர்களாக; நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

௩௩ நாம் உங்களுக்குப் பராபரனாயிருப்பதற்காக, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர்; நாம் கர்த்தரென்று சொல்லென்றார்.

௨௩. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், சபைகூடிவந்து, பரிசுத்தநாள்களாக ஆசரிக்கும்படிக்கு, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாள்களாவது:

௩ ஆறுநாள் வேலைசெய்யப்படுவதாக; ஏழாம்நாளோவெனில், சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாள், அதில் ஒரு வேலையையும் செய்யீர்களாக; அது உங்கள் வாசஸ்தலங்களில் எல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக.

௪ ¶ சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிக்கும்படிக்கு, நீங்கள் திட்டமான காலத்திலே கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகள் எவைகளெனில்,

௫ *முதலாம்மாதம் பதினான்காம்தேதி அந்திநேரமாகிறவேளையிலே கர்த்தருக்குப் பஷாவும், *௨ மோ. ௰௨. ௰௮.

௬ அந்த மாதம் பதினைந்தாம்தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையுமாயிருக்கும்; ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பீர்களாக.

௭ முதலாம்நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே யாதொரு பணிவிடை வேலையைச் செய்யீர்களாக.

௮ ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனம்செலுத்தக்கடவீர்கள்; ஏழாம்நாள் சபைகூடும் பரிசுத்தநாள்; அதில் யாதொரு பணிவிடை வேலையையும் செய்யீர்களாக என்று சொல்லென்றார்.

௯ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் வந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்பொழுது, உங்கள் அறுப்பின் முதல்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனண்டையில் கொண்டுவரக்கடவீர்கள்.

௰௧ உங்கள்மேலே பிரியம் உண்டாக, ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்குப் பின்னான மறுநாளிலே கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டுவானாக.

௰௨ நீங்கள் அதை அசைவாட்டுகிற அந்நாளிலே, கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாக, ஒருவயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும்,

௰௩ கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையான தகனமாக, ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டுபங்கானதும், எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய அதின் கா

ணிக்கையையும், திராட்சப்பழ இரசத்திலே கால்படியாகிய அதின் ஊற்றுதலையும், செலுத்தக்கடவீர்கள்

௰௪ உங்கள் பராபரனுடைய காணிக்கையை நீங்கள் கொண்டுவரும் அந்நாள்மட்டும், அப்பமும் சுட்ட கதிரும் பச்சைக்கதிரும் புசியீர்களாக, இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

௰௫ ¶ நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக் கொண்டுவந்த ஓய்வுநாளுக்குப் பின்னான அந்த மறுநாள்முதல்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்களைச் சரியாகப் போகவிட்டு,

௰௬ ஏழாம் ஓய்வுநாளுக்குப் பின்னான மறுநாளாகிய ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதுக்காணிக்கையைச் செலுத்தக்கடவீர்கள்.

௰௭ நீங்கள் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டுபங்காகிய மெல்லியமாவிலே புளிப்பாகச் சுட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கு முதல்பலனாகக் கொண்டுவந்து,

௰௮ அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாக, ஒருவயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளை எருதையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையான தகனமாக அவைகளுக்கு அடுத்த காணிக்கையையும் ஊற்றுதல்களையும் செலுத்தி,

௰௯ வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பாவம்போக்கும் பலியும், ஒருவயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைச் சமாதானபலியுமாக்கக்கடவீர்கள்.

௨௰ அவைகளை ஆசாரியன் முதல்பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூட, கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டக்கடவன்; கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாம்.

௨௧ அந்த நாள்தானே உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாளென்று கூறக்கடவீர்கள்; யாதொரு பணிவிடை வேலையை அதிலே செய்யீர்களாக; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

௨௨ ¶ *உங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், உன் வயலின் ஓரத்தில் இருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடுவாயாக; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார். * ௩ மோ. ௰௯. ௯.

௨௩ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௪ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், உங்களுக்கு ஏழாம்மாதம் முதலாம்தேதி கெம்பீரப் பிரஸ்தாபத்தின் பண்டிகை என்ற சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக.

௨௫ அதிலே யாதொரு பணிவிடை வேலையைச் செய்யாமல், கர்த்தருக்குத் தகனம் செலுத்துவீர்களாக என்றுசொல்லென்றார்.

௨௬ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௭ அந்த ஏழாம்மாதம் பத்தாம்தேதியோவென்றால், உங்களுக்குப் பாவநிவிர்த்தி ஆகுதலின் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருக்கும்; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத்தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத்தகனம்செலுத்தக்கடவீர்கள்.

௨௮ ஆகையால் அந்நாளிலே யாதொரு வேலையையும் செய்யீர்களாக; ஏனெனில் அது உங்கள் பராபரனாகிய கர்த்தரின் சந்நிதியில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும் நாளாயிருக்கின்றது.

௨௯ அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் சனத்தாரிலிராதபடிக்கு அறுப்புண்பான்.

௩௰ அந்நாளிலே யாதொரு ஆத்துமா யா

தொரு வேலையைச் செய்தால், அந்த ஆத்துமாவை அவன் சனத்தின் நடுவிலே வைக்காமல் அழிப்போம்.

௩௧ நீங்கள் எந்த வேலையும் செய்யாதிருப்பது, உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

௩௨ அது உங்களுக்கு ஓய்வுக்கு ஓய்வுநாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; அந்த மாதத்தின் ஒன்பதாம்தேதி சாயங்காலம்துவக்கி, மறுசாயங்காலம்மட்டும், உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார்.

௩௩ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௩௪ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், அந்த ஏழாம்மாதம் பதினைந்தாம்தேதி கர்த்தருக்கு ஏழுநாளாக ஆசரிக்கும் கூடாரப்பண்டிகை.

௩௫ முதலாம்நாள் சபைகூடும் பரிசுத்தநாள்; யாதொரு பணிவிடை வேலையும் செய்யீர்களாக.

௩௬ ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனம்செலுத்தக்கடவீர்கள்; எட்டாம்நாளும் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே கர்த்தருக்குத் தகனம் செலுத்தக்கடவீர்கள்; அது ஆசரிக்கப்படும்நாள்; அதிலே யாதொரு பணிவிடை வேலையைச் செய்யாதிருப்பீர்களாக.

௩௭ நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாள்களிலே செலுத்துவதல்லாமலும், நீங்கள் கர்த்தருக்குப் படைக்கிற உங்கள் எல்லாக் காணிக்கைகளும் பொருத்தனைகளும் உற்சாகப்பலிகளும் அல்லாமலும்,

௩௮ நீங்கள் அந்தந்த நாளுக்குத்தக்கபடி, கர்த்தருக்குச் சர்வாங்கதகனம், காணிக்கை, பலி, ஊற்றுதல் முதலான தகனங்களைச் செலுத்தும்படிக்குச் சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகள்தானே.

௩௯ நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்திருக்கும் ஏழாம்மாதம் பதினைந்தாம்தேதியிலோவென்றால், கர்த்தருடைய பண்டிகையை ஏழுநாளாக ஆசரிக்கக்கடவீர்கள்; முதலாம்நாளிலும் ஓய்வு; எட்டாம்நாளிலும் ஓய்வு.

௪௰ முதலாம்நாளிலே, அலங்கார விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சமட்டை ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, உங்கள் பராபரனாகிய கர்த்தருக்குமுன்பாக ஏழுநாள் மகிழ்ச்சியாயிருந்து,

௪௧ வருஷம்தோறும் ஏழுநாள் கர்த்தருக்கு இந்தப் பண்டிகையை ஆசரிக்கக்கடவீர்கள்; இது உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை; ஏழாம்மாதத்தில் அதை ஆசரிக்கக்கடவீர்கள்.

௪௨ நாம் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபொழுது, அவர்களைக் கூடாரங்களிலே குடியிருக்கப்பண்ணினதை உங்கள் தலைமுறை தலைமுறையாக அறியும்படிக்கு,

௪௩ ஏழுநாள் கூடாரங்களிலே குடியிருக்கக்கடவீர்கள்; இஸ்ரவேலிலே பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரங்களிலே குடியிருப்பார்களாக; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார்.

௪௪ ¶ அப்படியே மோசே கர்த்தருடைய பண்டிகைகளின் வர்த்தமானத்தை இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னான்.

௨௪. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ *குத்துவிளக்கில் எப்பொழுதும் வெளிச்சம் ஏற்றும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் இடித்துப் பிழியப்பட்ட தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னண்டைக்குக் கொண்டுவர அவர்களுக்குக் கற்பி.

௩ ஆசரிப்புக்கூடாரத்திலே சாட்சியின்

---

*௨ மோ. ௨௭. ௨௰.

திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை எப்பொழுதும், சாயங்காலம்துவக்கி, விடியற்காலம்மட்டும், கர்த்தருக்குமுன்பாக எரியவைக்கக்கடவன்; இது உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

௪ அவன் எப்பொழுதும் கர்த்தருக்குமுன்பாகச் சுத்தமான குத்துவிளக்கின்மேலிருக்கிற விளக்குகளை எரியவைக்கக்கடவன்.

௫ ¶ மெல்லிய மாவைவாங்கி, அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக; ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே பத்தில் இரண்டுபங்கு மாவினாலே செய்யப்படுவதாக.

௬ அவைகளை நீ கர்த்தருக்குமுன்பாக, சுத்தமான மேசையின்மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு இருக்கும்படிக்கு வைத்து,

௭ ஒவ்வொரு அடுக்கினிடத்திலே சுத்தமான குங்குலிகம் போடக்கடவாய்; அது அப்பத்தோடிருந்து நினைப்புக்கென்று கர்த்தருக்குத் தகனமாயிருக்கும்.

௮ அதை நித்திய உடம்படிக்கையாக இஸ்ரவேல் புத்திரர்கையிலே வாங்கி, ஓய்வுநாள்தோறும் கர்த்தருக்குமுன்பாக அடுக்கிவைக்கக்கடவன்.

௯ அது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அதைப் பரிசுத்தவிடத்திலே புசிக்கக்கடவர்கள்; ஏனெனில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம், கர்த்தருடைய தகனங்களில் அது அவனுக்கு நித்தியகட்டளை என்றார்.

௰ ¶ இஸ்ரவேல் சாதியான ஸ்திரீக்கும் எகிப்தியபுருஷனுக்கும் மகனாகிய ஒருவன், இஸ்ரவேல் புத்திரரோடேகூடப் புறப்பட்டுவந்திருந்தான்; இவனும் இஸ்ரவேலனாகிய ஒரு மனிதனும் பாளயத்திலே சண்டைபண்ணினார்கள்.

௰௧ அப்பொழுது இஸ்ரவேல் சாதியான அந்த ஸ்திரீயின் மகன் நாமநிந்தை சொல்லித் தூஷணித்தான்; ஆகையால் அவனை மோசேயண்டைக்குக் கொண்டுவந்தார்கள்; அவன் தாயின்பேர் சேலோமீத், அவள் தாண் கோத்திரத்தானாகிய திப்ரியின் குமாரத்தி.

௰௨ கர்த்தரின் வாக்கினாலே தங்களுக்கு உத்தரவு வரும்மட்டும், அவனைக் காவல்படுத்தினார்கள்.

௰௩ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௪ தூஷணித்தவனைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோ; கேட்டவர்கள் எல்லாரும் தங்கள் கைகளை அவன் தலையின்மேல் வைப்பார்களாக; பிற்பாடு சபையெல்லாம் அவனைக் கல் எறியக்கடவது.

௰௫ ஆனால் இஸ்ரவேல் புத்திரரோடே நீ சொல்லவேண்டியதேதெனில், எவனாகிலும் தன் பராபரனைத் தூஷணித்தால், அவன் தன் பாவத்தைச் சுமப்பான்.

௰௬ கர்த்தரின் நாமத்தை நிந்தையாகச் சொல்லுகிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; சபையெல்லாம் அவனைக் கல் எறியவே எறியக்கடவது; பரதேசியாகிலும் சரி, தேசத்திலே பிறந்தவனாகிலும் சரி, நாமத்தைத் தூஷணித்தானானால் கொலையுண்ணக்கடவன்.

௰௭ யாதொரு மனித சீவனை ஒருவன் கொன்றால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௰௮ மிருகசீவனைக் கொன்றவன் சீவனுக்குச் சீவனைச் செலுத்தக்கடவன்.

௰௯ ஒருவன் தனக்கு அடுத்தவனில் ஊனம் உண்டாக்கினால், அவன் செய்தபடி அவனுக்குச் செய்யப்படக்கடவது.

௨௰ நொறுக்குதலுக்கு நொறுக்குதலும், கண்ணுக்குக் கண்ணும், பல்லுக்குப் பல்லும்தானே; அவன் மனிதனில் ஊனம் உண்டாக்கினபடியே அவனிலும் உண்டாக்கப்படக்கடவது.

௨௧ மிருகத்தைக் கொன்றவன் பதில் கொடுக்கக்கடவன்; மனிதனைக் கொன்றவனோ, கொலையுண்ணக்கடவன்.

௨௨ உங்களில் பரதேசிக்கும் தேசத்திலே பிறந்தவனுக்கும் ஏகமான நியாயம் இருக்

கக்கடவது; ஏனெனில் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார்.

௨௩ அப்படியே தூஷணித்தவனைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய், அவனைக் கல் எறிவதற்காக மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே இவர்கள் செய்தார்கள்.

௨௫. அதிகாரம்.

கர்த்தர் சீனாய்பர்வதத்தில் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் வந்திருக்கும்பொழுது, தேசம் கர்த்தருக்கென்றுஓய்வுகளைக்கொண்டாடவேண்டும்.

௩ *ஆறுவருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்சத்தோட்டத்தைக் கிளை நறுக்கி, அதின் பலனைச் சேர்ப்பாயாக. *௨ மோ. ௨௩. ௰, ௰௧.

௪ ஏழாம்வருஷத்திலோவென்றால், கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும்; உன் வயலை விதைக்காமலும், உன் திராட்சத்தோட்டத்தைக் கிளை நறுக்காமலும்,

௫ சயமாய் உனக்கு விளைந்த பயிரானதை அறுத்துக்கொள்ளாமலும், நீ கிளை நறுக்காதே விட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக; தேசத்திற்கு அது ஓய்ந்திருக்கும் வருஷமாய் இருக்கக்கடவது.

௬ தேசத்தின் ஓய்விலே பயிராகிறது உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; உனக்கும், உன் வேலைக்காரனுக்கும், உன் வேலைக்காரிக்கும், உன் கூலியாளுக்கும், உன்னிடத்திலே தங்குகிற உன்னுடைய பரதேசிக்கும்,

௭ உன் மிருகஜீவனுக்கும், உன் தேசத்திலிருக்கிற காட்டுச்ஜீவனுக்கும், அதின் பலனெல்லாம் ஆகாரமாய் இருப்பதாக.

௮ ¶ பின்னையும் ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழேழு வருஷங்களை எண்ணுவாயாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களுள்ள நாள்கள் உனக்கு நாற்பத்தொன்பது வருஷம் ஆகும்.

௯ அப்பொழுது ஏழாம்மாதம் பத்தாம் தேதியிலே தொனிக்கிற எக்காளத்தைச் சுற்றித் திரியப்பண்ணுவாயாக; பாவநிவிர்த்தியாகுதலின் நாளிலே அதை உங்கள் தேசமெங்கும் திரியப்பண்ணி,

௰ ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலையைக் கூறக்கடவீர்கள்; அது உங்களுக்குச் சீர்திருந்தும் வருஷம்; அதிலே நீங்கள் அவரவர் தங்கள் காணியாட்சிக்கும் அவரவர் தங்கள் வம்சத்திற்கும் திரும்புவீர்கள்.

௰௧ அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்குச் சீர்திருந்தும் வருஷமாயிருப்பதாக; அதிலே விதைக்காமலும், சயமாய் விளைந்த பயிரானதை அறுத்துக்கொள்ளாமலும் கிளை நறுக்காதே விடப்பட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பீர்களாக.

௰௨ ஏனெனில், அது சீர்திருந்தும் வருஷம்; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும்; அதின் பலனை வயலில் எடுத்து, புசித்துக்கொண்டு இருப்பீர்களாக.

௰௩ சீர்திருந்தும் அந்த வருஷத்தில் நீங்கள் அவரவர் தங்கள் காணியாட்சிக்குத் திரும்புவீர்கள்.

௰௪ ஆகையால் ஏதாகிலும் உங்களுக்கடுத்தவனுக்கு விற்று, அல்லவென்று அவன் கையிலே கொண்டீர்களானால், ஒருவரை ஒருவர் இடுக்கண் செய்யீர்களாக.

௰௫ சீர்திருந்தும் வருஷத்திற்குப்பிறகு சென்ற வருஷங்களின் இலக்கத்திற்குத் தக்கதாக உனக்கடுத்தவன் கையிலே கொள்ளுவாயாக; பலனுள்ள வருஷங்களின் இலக்கத்திற்குத்தக்கதாக அவன் உனக்கு விற்பானாக.

௰௬ வருஷங்கள் அநேகமானால் அதின் விலையை உயர்த்தி, கொஞ்சமானால் அதைத் தாழ்த்துவாயாக; ஏனெனில் பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து, அவன் உனக்கு விற்கிறான்.

௰௭ உங்களில் ஒருவனும் தனக்கடுத்தவனை இடுக்கண் செய்யவேண்டாம்; உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக; ஏனெனில் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௰௮ ¶ நம்முடைய கட்டளைகளின்படி செய்து, நம்முடைய நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; அப்பொழுது தேசத்திலே சுகமாய்க் குடியிருந்து,

௰௯ பூமி தன் கனியைத் தருகிறதினாலே திர்ப்தியாகச் சாப்பிட்டு, அதிலே சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

௨௰ ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம்? இதோ நாங்கள் விதைக்காமலும், எங்கள் பலனைச் சேர்க்காமலும் இருக்கவேண்டுமே என்றீர்களேயானால்,

௨௧ ஆறாம் வருஷம் மூன்று வருஷங்களின் பலனைத்தர, நமது ஆசீர்வாதத்தை உங்களுக்காகக் கட்டளையிடுவோம்.

௨௨ ஆனதினாலே நீங்கள் எட்டாம் வருஷத்திலே விதைத்து, பழைய பலனிலே ஒன்பதாம் வருஷம்மட்டும் சாப்பிடுவீர்கள்; இதின் பலன் வரும்மட்டுக்கும் பழைய பலனைச் சாப்பிடுவீர்கள்.

௨௩ ¶ நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; அதேனென்றால் தேசம் நம்முடையது; நீங்கள் நமக்குமுன்பாகப் பரதேசிகளும் தங்கியிருக்கிறவர்களும்தானே.

௨௪ ஆகையால் உங்கள் காணியாட்சியான தேசமெங்கும், நிலங்களின் மீட்புக்கு இடம்கொடுக்கக்கடவீர்கள்.

௨௫ உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவனைச் சேர்ந்த மீட்பன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன்.

௨௬ மீட்பன் இல்லாதவனுக்கோவெனில், தன் மீட்புக்குத் தேவையான அவகாசம் அகப்பட்டால்,

௨௭ அவன் தன்னுடைய காணியாட்சிக்குத் திரும்பிவரும்படிக்கு, அதை விற்றபிறகு சென்ற வருஷங்களின் கணக்கைத் தள்ளி, மீதியானதை அதைக் கொண்டவனுக்குத் திரும்பக் கொடுப்பானாக.

௨௮ இவனுக்குத் திரும்பக் கொடுப்பதற்கான அவகாசம் அவனுக்கு அகப்படாமல் போயிற்றேயாகில், அவன் விற்றது கொண்டவன் கையிலே சீர்திருந்தும் வருஷம்மட்டும் இருந்து, சீர்திருந்தும் வருஷத்திலோவென்றால், அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பி வரும்படிக்கு அது நீங்கலாகக்கடவது.

௨௯ ¶ ஒருவன் மதிலுள்ள பட்டணத்தில் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்றபிறகு ஒரு வருஷம்மட்டும் அதின் மீட்புச் செல்லும்; அதின் மீட்புக்கு ஒரு முழுவருஷம் தவணையாய் இருப்பதாக.

௩௰ ஒரு முழுவருஷகாலம் நிறைவேறும்மட்டும் அது மீட்கப்படாதிருந்ததேயானால், அப்பொழுது மதிலுள்ள பட்டணத்திலிருக்கும் அந்த வீட்டைக் கொண்டவனுக்குஅது தலைமுறைதலைமுறையாக நிலைத்திருக்கக்கடவது; சீர்திருந்தும் வருஷத்தில் அது நீங்கலாவதும் இல்லை.

௩௧ சுற்றிலும் மதிலில்லாத கிராமங்களின் வீடுகளோவெனில், தேசத்தின் வயல்வெளிக்குச் சரியாக எண்ணப்படுவதாக; அவைகளுக்கு மீட்பிருக்கும்; சீர்திருந்தும் வருஷத்தில் நீங்கலுமாகும்.

௩௨ இலேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களின் வீடுகளுக்கோவென்றால், இலேவியருக்கு என்றைக்கும் மீட்புக்கு இடமுண்டு.

௩௩ விற்றவனுடைய காணியாட்சிப் பட்டணமான ஊரின் வீடு இலேவியரில் பின்னொருவரால் மீட்கப்பட்டிருந்தாலும், சீர்திருந்தும் வருஷத்தில் நீங்கலாகவேண்டும்; ஏனெனில் இலேவியருடைய பட்ட

ணங்களின் வீடுகள் இஸ்ரவேல் புத்திரரின் நடுவிலே அவர்களுக்கு இருக்கிற காணியாட்சி.

௩௪ ஆனால் அவர்கள் பட்டணங்களுடைய பேட்டைகளின் வயல்வெளி விற்கப்படாதிருப்பதாக; ஏனெனில் அது அவர்களுக்கு நித்தியகாணியாட்சியாய் இருக்கின்றது.

௩௫ ¶ உன் சகோதரன் உன்னிடத்திலே தரித்திரப்பட்டு, கை இளைத்தவனானால், அவனைத் திடப்படுத்துவாயாக; பரதேசியையும் தங்கவந்தவனையும்போல, அவன் உன்னோடே பிழைப்பானாக.

௩௬ நீ அவன் கையில் வட்டியையும் சொச்சத்தையும் வாங்காமல், உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படிக்கு, உன் பராபரனுக்குப் பயப்படக்கடவாய்.

௩௭ அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும் உன் போசனத்தைச் சொச்சத்திற்கும் கொடாயாக.

௩௮ நாம் உங்களுக்குக் கானான்தேசத்தைக் கொடுத்து, உங்களுக்குப் பராபரனாயிருக்கும்படிக்கு, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௯ ¶ உன் சகோதரன் உன்னிடத்திலே தரித்திரனாகி உனக்கு விலைப்பட்டுப்போனால், அவனை அடிமைவேலைகொள்ளாயாக.

௪௰ அவன் கூலிக்காரனைப்போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்து, சீர்திருந்தும் வருஷம்மட்டும் உன்னிடத்திலே சேவித்து,

௪௧ அப்பொழுது தன் பிள்ளைகளோடுங்கூட உன்னைவிட்டு நீங்கலாகி, தன் வம்சத்தண்டைக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பிவருவானாக.

௪௨ ஏனெனில் அவர்கள் நாம் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நம்முடைய வேலைக்காரர்; அடிமை விற்கப்படுவதுபோல, அவர்கள் விற்கப்படவேண்டாம்.

௪௩ *நீ அவனைக் கொடூரமாய் ஆளாமல், உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக.

*எபே. ௬. ௯.

௪௪ உனக்கிருக்கும் அடிமையும் அடிமைப்பெண்ணும் உங்களைச் சுற்றிலுமிருக்கிற புறச்சாதிகளின் மனிதராயிருக்கவேண்டும்; அவைகளில் நீ அடிமையையும், அடிமைப்பெண்ணையும் கொள்ளலாம்.

௪௫ உங்களிடத்தில். பரதேசிகளாய்த் தங்குகிற அந்நியரின் புத்திரரிலும், உங்கள் தேசத்தில் உங்களிடத்திலே பிறந்திருக்கிற அவர்களுடைய வம்சத்தாரிலுங்கூட, நீங்கள் உங்களுக்கு அடிமைகளைக் கொண்டு,

௪௬ அவர்களை உங்களுக்கும் உங்களுக்குப்பிற்பாடு உங்கள் பிள்ளைகளுக்கும் சொந்தச் சுதந்தரமாக்கி, என்றைக்கும் ஆண்டுகொண்டிருக்கலாம்; ஆனால் இஸ்ரவேல் புத்திரராகிய உங்கள் சகோதரரில் ஒருவனை ஒருவர் கொடூரமாக ஆளவேண்டாம்.

௪௭ ¶ உன்னிடத்திலிருக்கிற பரதேசியும் அந்நியனும் அவகாசம்பெற்றிருக்கும்போது, அவனிடத்திலிருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு, அவனுக்கும் அல்லது அவன் வம்ச சந்ததிக்கும் விலைப்பட்டுப்போனால்,

௪௮ விலைப்பட்டுப்போனபிற்பாடு அவனுக்கு மீட்புண்டாவதாக; அவன் சகோதரரில் ஒருவன் அவனை மீட்கக்கடவன்.

௪௯ அவனுடைய பெரிய சிறியதகப்பனானாலும், பெரிய சிறியதகப்பன் குமாரனானாலும் அவன் வம்சத்தில் அவனைச் சேர்ந்த சபையாரில் ஒருவனானாலும், அவனை மீட்பானாக; அல்லவென்று அவனுக்கு அவகாசம்கிடைத்தால், தன்னைத்தான் மீட்கலாம்.

௫௰ அவன் தன்னைக் கொண்டவன் கையிலே விலைப்பட்டுப்போன வருஷத்திற்கும் சீர்திருந்தும் வருஷத்திற்கும் இருக்குங்காலத்தை அவனோடே கணக்குப்பார்ப்பானாக; அவனோடே ஒரு கூலிக்காரனாய் இத்தனைநாள் இருந்ததுபோல, அவனுடைய விலைக்கிரயம் வருஷங்களின் இலக்கத்

திற்கொத்துப் பார்க்கப்படக்கடவது.

௫௧ இன்னம் அநேகம் வருஷங்கள் இருந்தால், அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாக, திரும்பக் கொடுக்கக்கடவன்.

௫௨ சீர்திருந்தும் வருஷம்மட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால், அவனோடே கணக்குப்பார்த்து, தன் வருஷங்களுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாக, திரும்பக் கொடுக்கக்கடவன்.

௫௩ ஒரு கூலிக்காரனைப்போல, அவனோடே வருஷத்திற்கு வருஷம் இருப்பானாக; அவன் இவனை உன் பார்வைக்குக் கொடூரமாக ஆளவேண்டாம்.

௫௪ இவ்விதங்களாய் அவன் மீட்டுக்கொள்ளப்படாதேபோனால், அவனும் அவன் பிள்ளைகளும்கூடச் சீர்திருந்தும் வருஷத்திலே நீங்கலாவார்கள்.

௫௫ ஏனெனில் இஸ்ரவேல் புத்திரர் நமக்கு வேலைக்காரர், அவர்கள் நாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நம்முடைய வேலைக்காரராயிருக்கிறார்கள்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௨௬. அதிகாரம்.

நீங்கள் உங்களுக்கு *விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நாட்டாமலும், சித்திரம் தீர்த்த கல்லை அதற்குமுன்பாகப் பணிய உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக; ஏனெனில் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர். *௨ மோ. ௨௰. ௪.

௨ நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்கொண்டு, நம்முடைய பரிசுத்தஸ்தலத்திற்கு அஞ்சி இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.

௩ ¶ *நீங்கள் நம்முடைய கட்டளைகளில் நடந்து, நம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்தால்,

*௫ மோ. ௨௮. ௧.

௪ நாம் ஏற்றகாலத்தில் உங்கள் மழைகளைத் தருவோம்; பூமி தன் பலனையும் நிலத்தின் மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்.

௫ போரடிப்பு உங்களுக்குத் திராட்சப்பழ அறுப்புமட்டும் வரும்; திராட்சப்பழ அறுப்பு விதைப்புக்காலம்மட்டும் வரும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

௬ தேசத்திலே சமாதானம் கட்டளை இடுவோம்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொண்டிருப்பீர்கள்; துஷ்டமிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவோம்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.

௭ உங்கள் சத்துருக்களைத் துரத்துவீர்கள்; அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

௮ உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்குமுன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

௯ நாம் உங்கள்மேலே நோக்கமாயிருந்து, உங்களைப் பலுகவும் பெருகவும்பண்ணி, உங்களோடிருக்கும் நம்முடைய உடம்படிக்கையைத் திடப்படுத்துவோம்.

௰ போன வருஷத்தின் பழைய தானியத்தைச் சாப்பிட்டு, புதியது வந்ததினாலே பழையதை விலக்குவீர்கள்.

௰௧ நம்முடைய வாசஸ்தலத்தை உங்கள் நடுவிலே வைப்போம்; நம்முடைய ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை.

௰௨ நாம் உங்கள் நடுவிலே உலாவி, உங்களுக்குப் பராபரனாயிருப்போம்; நீங்கள் நமக்குச் சனமாயிருப்பீர்கள்.

௰௩ நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு, நாம் உங்களை அவர்கள் தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் நுகத்தடிகளை உடைத்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௰௪ ¶ நீங்கள் நம்முடைய சொல்கேளாமலும், இந்தக் கற்பனைகளின்படி எல்லாம் செய்யாமலும்,

௰௫ நம்முடைய கட்டளைகளை வெறுக்கிறதும், உங்கள் ஆத்துமா நம்முடைய நியாயங்களை அரோசிக்கிறதும், நீங்கள் நம்முடைய கற்பனைகளின்படி எல்லாம் செய்யாதபடிக்கு, நம்முடைய உடம்படிக்கையை முறித்துப்போடுகிறதும் உண்டேயாகில்,

௰௬ நாம் உங்களுக்குச் செய்வதேதென்றால், கண்களைப் பூத்துப்போகப்பண்ணுகிறதும் ஆத்துமாவைக் கஸ்திப்படுத்துகிறதுமான திகிலையும் இளையையும் காய்ச்சலையும் உங்கள்மேலே வரப்பண்ணுவோம்; உங்கள் விதையை விருதாவாக விதைப்பீர்கள்; உங்கள் சத்துருக்கள் அதைத் தின்னுவார்கள்.

௰௭ நமது முகத்தை உங்களுக்கு விரோதமாகத் திருப்புவோம்; உங்கள் சத்துருக்களுக்குமுன்பாக முறியடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆண்டுகொள்வார்கள்; உங்களைத் துரத்துவார் இல்லாமல் ஓடுவீர்கள்.

௰௮ நீங்கள் இதனோடே இன்னம் நம்முடைய சொல்கேளாதேபோனால், நாம் உங்கள் பாவங்களினிமித்தம் பின்னையும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து,

௰௯ உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப் போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப்போலவும் இருக்கப்பண்ணுவோம்.

௨௰ உங்கள் பலம் விருதாவிலே செலவழியும்; உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனியையும் கொடாதேபோம்.

௨௧ நீங்கள் நமது சொல்கேட்க மனதில்லாமல் நமக்கெதிர்த்து நடந்தீர்களேயானால், நாம் உங்கள் பாவங்களுக்குத்தக்கதாக இன்னம் ஏழத்தனை வாதையை உங்கள்மேலே வரப்பண்ணி,

௨௨ உங்களுக்குள்ளே வெளியின் துஷ்டமிருகங்களை வரவிடுவோம்; அவைகள் உங்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்கி, உங்கள் மிருகசீவன்களை அழித்து, உங்களைக் குறைந்துபோகப்பண்ணும்; உங்கள் வழிகள் பாழ்த்துக்கிடக்கும்.

௨௩ நீங்கள் இந்தமட்டில் நமது தண்டனையாலே குணப்படாமல், நமக்கெதிர்த்து நடந்தால்,

௨௪ நாம் உங்களுக்கெதிர்த்து நடந்து, நாம் உங்களை உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாக வாதித்து,

௨௫ உடம்படிக்கையின் நீதியை விசாரிக்கிறதாகிய சரிக்குச்சரிக்கட்டும் பட்டயத்தை உங்கள்மேலே வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் வந்தடைந்தபிறகு, பெருவாரிக்காய்ச்சலை உங்கள் நடுவில் அனுப்புவோம்; சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள்.

௨௬ நாம் அப்பமென்ற ஆதரவுகோலை உங்களுக்கு ஒடித்திருக்கும்பொழுது, பத்து ஸ்திரிகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு, அதைத் திரும்ப உங்களுக்கு நிறுத்துக்கொடுப்பார்கள்; திர்ப்தி அடையாமல் சாப்பிடுவீர்கள்.

௨௭ ¶ இதனுடனே நீங்கள் நம்முடைய சொல்கேளாமல், நமக்கு எதிர்த்து நடந்தால்,

௨௮ நாமும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நாம் நாமே உங்களை உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாகத் தண்டிப்போம்.

௨௯ உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள்.

௩௰ நாம் உங்கள் மேடைகளை அழித்து, உங்கள் விக்கிரகச்சிலைகளை நிர்த்தூளியாக்கி, உங்கள் உடல்களை உங்கள் நரகலான தேவர்களுடைய உடல்களின்மேலே போடுவிப்போம்; நம்முடைய ஆத்துமா உங்களை அரோசிக்கும்.

௩௧ நாம் உங்கள் பட்டணங்களை வனாக்

தரமும் உங்கள் பரிசுத்தஸ்தலங்களைப் பாழுமாக்கி, உங்களுடைய ஆற்றுகிற வாசனையை முகராதிருப்போம்.

௩௨ நாம் தேசத்தை அதிலே குடியிருக்கப்போகிற உங்கள் சத்துருக்கள் பிரமிக்கத்தக்கதாகப் பாழாக்கி,

௩௩ உங்களைச் சாதிகளுக்குள்ளே சிதறடித்து, உங்கள் பிறகாலே பட்டயத்தை உருவுவோம்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாம்.

௩௪ நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்திலிருக்கும் அப்பொழுது, தேசமானது பாழாய்க்கிடக்கிற நாளெல்லாம் தன்னுடைய ஓய்வுகளை இரம்மியமாய் அநுபவிக்கும்; அப்பொழுது ஓய்வடைந்து, தன் ஓய்வுகளை இரம்மியமாய் அநுபவிக்கும்.

௩௫ நீங்கள் அதிலே குடியிருக்கும்பொழுது அது உங்கள் ஓய்வு வருஷங்களில் ஓய்வடையாதபடியினாலே, அது பாழாய்க்கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும்.

௩௬ உங்களில் மீதியாயிருப்பவர்களின் இருதயங்களில் நாம் அவர்கள் சத்துருக்களின் தேசங்களிலே மனத்தளர்ச்சியை வரப்பண்ணுவோம்; காற்றடிக்கும் இலையின் இரைச்சல் அவர்களை ஓட்டும்; அவர்கள் பட்டயத்திற்குத்தப்பி ஓடுகிறதுபோல ஓடி, துரத்துவாரில்லாமல் விழுவார்கள்.

௩௭ துரத்துவாரில்லாமல் ஒருவர்மேல் ஒருவர், பட்டயம் பிறகாலே வருகிறதுபோல, இடறிவிழுவார்கள்; உங்கள் சத்துருக்களுக்குமுன்பாக உங்களுக்குத் தரிக்கக்கூடாததாயிருக்கும்.

௩௮ புறச்சாதிகளுக்குள் அழிவீர்கள்; உங்கள் சத்துருக்களின் தேசம் உங்களைப் பட்சிக்கும்.

௩௯ ¶ உங்களில் மீதியாய் இருப்பவர்கள் உங்கள் சத்துருக்களின் தேசங்களிலே தங்கள் அக்கிரமங்களினாலும் தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலுங்கூட வாடிப்போய்,

௪௰ தாங்கள் நமக்குவிரோதமாகத் துரோகம்பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும்,

௪௧ தாங்கள் நமக்கு எதிர்த்து நடந்தபடியினாலே, நாமும் தங்களுக்கெதிர்த்து நடந்து, தங்களைத் தங்கள் சத்துருக்களின் தேசத்திலே கொண்டுபோய் விட்டதையும், அறிக்கை இடுவார்கள்; அப்பொழுது சுன்னத்தில்லாத அவர்கள் இருதயம் தாழ்ந்துபோய், அவர்கள் தங்கள் அக்கிரமத்தின் ஆக்கினையை நல்லதென்று ஒத்துக்கொண்டால்,

௪௨ நாம் யாக்கோபோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும், இசாக்கோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும் நினைப்போம்; தேசத்தையும் நினைப்போம்.

௪௩ ¶ அவர்கள்நிமித்தம் வெறுமையே விடப்பட்டதும், பாழாய்க் கிடக்கிறதினாலே தன் ஓய்வுகளை இரம்மியமாக அநுபவிக்கிறதுமான தேசத்தைத்தானே; அவர்களும் நம்முடைய நியாயங்களை வெறுத்தபடியினாலும், அவர்களுடைய ஆத்துமா நம்முடைய கட்டளைகளை அரோசித்தபடியினாலும், அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நல்லதென்று ஒத்துக்கொள்ளுவார்கள்.

௪௪ ஆனதுகொண்டு அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நாம் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கவிதமாகவும், அவர்களோடிருக்கிற நம்முடைய உடம்படிக்கையை அவத்தமாக்கத்தக்கவிதமாகவும் அவர்களைப் புறக்கணிப்பதும் இல்லை, அரோசிப்பதும் இல்லை; ஏனெனில் நாம் அவர்கள் பராபரனாகிய கர்த்தர்.

௪௫ அவர்களுடைய பராபரனாயிருக்கும்படிக்கு, நாம் புறச்சாதிகளின் கண்களுக்குமுன்பாக எகிப்துதேசத்திலிருந்து புறப்

படப்பண்ணின அவர்களுடைய முன்னோர்களோடே நாம் பண்ணின உடம்படிக்கையை அவர்களுக்காக நினைவுகூருவோம்; நாம் கர்த்தர் என்று சொல்லென்றார்.

௪௬ ¶ தமக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே இருக்கும்படிக்கு, கர்த்தர் சீனாய் பர்வதத்திலே மோசேயைக்கொண்டு கொடுத்த கட்டளைகளும் நியாயங்களும் நியாயப்பிரமாணங்களும் இவைகள்தாமே.

௨௭. அதிகாரம்.

௧ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒருவன் ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணியிருந்தால், ஆத்துமாக்கள் உன் மதிப்பின்படிக்குக் கர்த்தருடையவர்கள்.

௩ இருபதுவயதுமுதல்கொண்டு, அறுபது வயதுக்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை நீ பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலாகிய ஐம்பது வெள்ளிச்சேக்கலாகவும்,

௪ பெண்சாதியை முப்பது சேக்கலாகவும், மதிப்பாயாக.

௫ ஐந்துவயது முதல்கொண்டு இருபது வயதிற்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை இருபது சேக்கலாகவும், பெண்பிள்ளையைப் பத்துச் சேக்கலாகவும்,

௬ ஒருமாதம் முதல்கொண்டு ஐந்து வயதிற்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை ஐந்து வெள்ளிச் சேக்கலாகவும், பெண்பிள்ளையை மூன்று வெள்ளிச் சேக்கலாகவும்,

௭ அறுபது வயதும் அதிகமுமான ஆண்பிள்ளையைப் பதினைந்து சேக்கலாகவும், பெண்சாதியைப் பத்துச் சேக்கலாகவும், மதிக்கக்கடவாய்.

௮ உன் மதிப்பைச் செலுத்தக்கூடாத தரித்திரனாயிருந்தானேயாகில், அவன் ஆசாரியனுக்குமுன்பாகத் தன்னை மதிக்கும்படிக்கு வந்து நிற்கக்கடவன்; பொருத்தனைபண்ணினவனுடைய கைக்கு உதவுகிறதற்குத்தக்கவிதமாக ஆசாரியன் அவனை மதிப்பானாக.

௯ ¶ கர்த்தருக்குப் பலியிடப்படத்தக்க மிருகசீவனேயானால், அவன் கர்த்தருக்குக் கொடுக்கிற அப்படிக்கொத்ததெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக.

௰ அதை மாற்றாமலிருப்பானாக; இளப்பமானதற்குப்பதிலாக நல்லதையும், நல்லதற்குப்பதிலாக இளப்பமானதையும், கொடாமலிருப்பானாக; அவன் மிருகத்திற்குப் பதிலாக மிருகத்தைக் கொடுத்தானேயாகில், அப்பொழுது அதுவும் அதற்குப் பதிலானதும் பரிசுத்தமாய் இருப்பதாக.

௰௧ அது கர்த்தருக்குப் பலியிடப்படத்தகாத தீட்டான யாதொரு மிருகமேயானால், அதை ஆசாரியனுக்குமுன்பாக நிறுத்தக்கடவன்.

௰௨ ஆசாரியன் அதை அதின் நன்மைக்கும் இளப்பத்திற்கும்தக்கதாக மதிப்பானாக; அவன் அதை மதிக்கிறபடியே இருக்கக்கடவது.

௰௩ அதை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்போடே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்.

௰௪ ¶ ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினால், ஆசாரியன் அதை அதின் நன்மைக்கும் இளப்பத்திற்கும்தக்கதாக மதிப்பானாக, அவன் அதை மதிக்கிறபடி இருக்கக்கடவது.

௰௫ பரிசுத்தம்பண்ணினவன் தன் வீட்டை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்; அப்பொழுது அவனுடையதாயிருக்கும்.

௰௬ ¶ ஒருவன் தன் காணியாட்சி வயல்வெளியிலே ஏதாகிலும் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினால், உன் மதிப்பு அதின் விதைப்புக்குத்தக்கதாய் இருக்கவேண்டும்; ஒரு கலம் வால்கோதுமை விதைக்கிற வயல் ஐம்பது வெள்ளிச் சேக்கலாக மதிக்கப்படக்கடவது.

௰௭ சீர்திருத்தும் வருஷம் முதல்கொண்

டே அவன் தன் வயலைப் பரிசுத்தம்பண்ணினால், உன் மதிப்பின்படி இருக்கக்கடவது.

௰௮ சீர்திருந்தும் வருஷத்திற்குப்பிற்பாடு அதைப் பரிசுத்தம்பண்ணினானேயாகில், அப்பொழுது சீர்திருந்தும் வருஷம்மட்டும் இருக்கும்; குறை வருஷங்களின்படியே திரவியம் ஆசாரியனாலே கணக்குப்பார்க்கப்பட்டு, அதற்குத் தக்கது உன் மதிப்பிலே தள்ளப்படக்கடவது.

௰௯ வயலைப் பரிசுத்தம்பண்ணினவன் அதை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டக்கடவன்; அப்பொழுது அவனுடையதாயிருக்கும்.

௨௰ அவன் வயலை மீட்காதேபோய், அதை வேறொருவனுக்கு விற்றானேயானால், இனி மீட்கப்படக்கூடாமல்,

௨௧ அது சீர்திருந்தும் வருஷத்தில் நீங்கலாகும்பொழுது, சாபத்தீடான வயலாகக் கர்த்தருக்குப்பரிசுத்தமாயிருக்கக்கடவது; அதின் காணியாட்சி ஆசாரியனைச் சேரும்.

௨௨ ஒருவன் தன் காணியாட்சி வயல் அல்லாததாகிய தான் கொண்ட ஒரு வயலைக் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினானேயாகில்,

௨௩ அது சீர்திருந்தும் வருஷம்மட்டும், உன் மதிப்பின்படி பெறும் விலையை ஆசாரியன் அவனோடே கணக்குப்பார்ப்பானாக; அந்த உன் மதிப்பை அவன் அந்நாளிலே கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, கொடுக்கக்கடவன்.

௨௪ யார்கையிலே அந்த வயலைக் கொண்டானோ, அந்தக் காணியாட்சிக்காரன் வசமாய், அது சீர்திருந்தும் வருஷத்திலே திரும்பும்.

௨௫ உன் மதிப்பெல்லாம் பரிசுத்தஸ்தலச் சேக்கல் கணக்காயிருக்கக்கடவது; சேக்கலானது இருபது கேரா.

௨௬ ¶ தலையீற்றுகளோவென்றால், கர்த்தருடையதானபடியினாலே தலையீற்றாகிய மிருகசீவனை ஒருவரும் பரிசுத்தம்பண்ணவொண்ணாது; அது மாடானாலும், ஆடானாலும், கர்த்தருடையதாயிருக்கிறதே.

௨௭ தீட்டான மிருகத்தினுடையதேயானால், அவன் உன் மதிப்பின்படி அதை மீட்டு, அதனுடனே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்; மீட்கப்படாமல் போயிற்றேயாகில், உன் மதிப்பின்படி விற்கப்படக்கடவது.

௨௮ ¶ ஒருவன் தனக்குண்டான நரசீவன், மிருகசீவன், காணியாட்சி, நிலம் முதலானவைகளில் எதையாகிலும் சாபத்தீடானதாகக் கர்த்தருக்குக் கொடுத்தானேயாகில், அது விற்கப்படவும் மீட்கப்படவும் வேண்டாம்; சாபத்தீடானவைகளாகக் கொடுக்கப்பட்டவைகளெல்லாம், கர்த்தருக்குப் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௨௯ நரசீவனில் சாபத்தீடாக நியமிக்கப்பட்டவைகளெல்லாம் மீட்கப்படாமல் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவது.

௩௰ ¶ தேசத்திலே நிலத்தின் விதைகளிலும், மரங்களின் கனியிலும், பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருடையது; அது கர்த்தருக்குப் பரிசுத்தம்.

௩௧ ஒருவன் பத்தில் ஒருபங்காகிய அதிலே சிலவற்றை மீட்க மனதாயிருந்தானேயானால், அதினுடனே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்.

௩௨ கோலின்கீழ்ப்போகிற ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தம்.

௩௩ அது நல்லதோ இளப்பமானதோ. என்று அவன் பார்க்கவேண்டாம்; அதற்குப் பதில்கொடுக்கவும் வேண்டாம்; பதில் கொடுத்தானேயாகில், அதுவும் அதற்குப் பதிலானதும் பரிசுத்தமாயிருக்கும்; அது மீட்கப்படக்கூடாதென்று அவர்களோடே சொல்லென்றார்.

௩௪ ¶ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படிக்குக் கர்த்தர் மோசேக்குச் சீனாய் பர்வதத்திலே கற்பித்த கற்பனைகள் இவைகள்தானே.